வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 04 | 03.04.2023 திங்கட்கிழமை | இதழ் : 116 | பக்கங்கள் : 16

## வெடுக்குநாறிமலை சென்ற அமைச்சர்கள் விக்கிரகங்களை பிரதிஷ்டை செய்ய மறுப்பு!

### 10ஆம் திகதிக்கு பின்னர் பேசி முடிவெடுப்பராம்

வவுனியா, ஏப். 03

வெடுக்குநாறிமலையில் உடைத்து எறியப்பட்ட விக்கிரகங்கள் புதிதாக (நேற்று) பிரதிஷ்டை செய்வேன் என்று உறுதியளித்த அமைச்சர் ஜீவன் தொண்டமானும் டக்ளஸ் தேவானந்தாவும் அதிலிருந்து பின்வாங்கியுள்ளனர்.

நேற்றைய தினம் வெடுக்குநாறிமலைக்கு சென்று அங்குள்ள நிலைமையை அவதானித்து மத வழிபாடுகளிலும் ஈடுபட்ட இருவரும் நீதிமன்றில் வழக்கு இருப்பதால் விக்கிரகங்களை பிரதிஷ்டை செய்வது தொடர்பாக பின்னர் தீர்மானிப்போம் என்று கூறியுள்ளனர்.

கடந்த 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வெடுக்குநாறிமலை 15



## சிவன் ஆலயம் அழிப்பு அழிவுக்கான ஆரம்பம்!

### ஆதிலிங்கேஸ்வரர் ஆலய அறங்காவலர்

வவுனியா, ஏப். 03

இலங்கை ஒரு சிவ பூமி. ஆதிலிங்கம் அழிக்கப்பட்டமை நாட்டின் அழிவுக்கான ஆரம்பம் என்று வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் 15

## ஆவணங்கள் கிடைத்ததும் ஆலய பிரச்னைக்கு தீர்வு!

### ஜீவன் தொண்டமான்

கொழும்பு, ஏப். 03

வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயம் தொடர்பான ஆவணங்கள் கிடைக்கப்பெற்றதும் ஆலயப் பிரச்னைக்கு தீர்வு காணப்படும் என்று அங்கு சென்ற அமைச்சர் ஜீவன் தொண்டமான் 15

## வடக்கு உள்ளூராட்சி சபைகளை கட்டுக்குள் போடுகிறார் ஆளுநர்!

### உடன் நடைமுறைக்கு வரும் வகையில் பல ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 03

**வடக்கு மாகாணத்தின் 34 உள்ளூராட்சி மன்றங்களின் மக்கள் பிரதிநிதிகள் சபைகளின் ஆட்சிக் காலம் கடந்த மார்ச் 19ஆம் திகதி நிறைவுக்கு வந்தது. இதையடுத்து அவற்றை நெறிப்படுத்தும் முகமாக இன்னோரன்ன முயற்சிகளை வடக்கு மாகாண ஆளுநர் எடுத்துள்ளார் என ஆளுநர் செயலகம் அறிவித்துள்ளது.**



இது தொடர்பாக ஊடகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், மாகாண சபையொன்று இல்லாத காலப்பகுதியில் உள்ளூராட்சிக்குப் பொறுப்பான அமைச்சரின் நிறைவேற்றுக் கடமைகளையும் ஆற்றி வரும் ஆளுநர் உள்ளூராட்சி மன்றங்கள் பிரதிநிதிகள் இல்லாத காலங்களிலும் இடையறாத பொதுமக்கள் சேவைகளை வழங்க வேண்டும் என அறிவுறுத்தியுள்ளார்.

இதற்காக மாநகர ஆணையாளரும் சகல சபைகளின் செயலாளர்களும் 15

## மகாவலி திட்டத்தின் கீழ்:

## 10 இலட்சம் காணி துண்டு தமிழருக்கு எதுவும் இல்லை!

### பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை

யாழ்ப்பாணம், ஏப். 03

மகாவலி திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட சுமார் 10 இலட்சம் காணி துண்டுகளில் எந்த தமிழருக்கும் ஒரு துண்டு காணியேனும் வழங்கப்படவில்லை என்று யாழ். பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் வாழ்நாள் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இலங்கையில் காணப்படுகின்ற தொல்லியல் திணைக்களம், வனவளத் திணைக்களம் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களம் என்பன மிக வேகமாக செயல்படுகின்றன. தமிழ் மக்களின் பூர்வீக விவசாய நிலங்கள், வழிபாட்டு இடங்களை தொல்லியல் வன ஒதுக்குப்பகுதி என காணிகளை கையகப்படுத்தி, அந்தத் தமிழர்களை காணி அற்றவர்களாக்குவதே இந்தத் திணைக்களங்களின் 15

## உரிய உணவின்றி துன்புறுத்தப்பட்ட 13 சிறுவர்கள் இல்லத்திலிருந்து மீட்பு!

யாழ்ப்பாணம், ஏப். 03

துன்புறுத்தப்பட்ட - உரியவகையில் உணவு வழங்கப்படாத நிலையில் சிறுவர் இல்லம் ஒன்றிலிருந்து 13 சிறுவர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட சிறுவர்கள் மருத்துவ அறிக்கைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை சட்ட மருத்துவ அதிகாரியிடம் முற்படுத்தப்பட்டுள்ளனர்.

கோப்பாய் பொலிஸார் மற்றும் சிறுவர் நன்நடத்தை அதிகாரிகளால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இந்த விடயம் குறித்து மேலும் அறிய வருவதாவது,

கானான் ஐக்கிய சபை என்ற கிறிஸ்தவ சபையால் இருபாலையில் அனுமதியின்றி சிறுவர் இல்லம் 15

## மாகாண சபை தேர்தல் திகதியுடன் புதுடில்லி செல்கின்றார் ஜனாதிபதி?

கொழும்பு, ஏப். 03

மாகாண சபைகள் தேர்தலுக்கான திகதி, 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி தமிழர் பிரச்னைக்கு தீர்வு வழங்கும் திட்டம் என்பவற்றுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியா - புதுடில்லிக்கு பயணமாகவுள்ளார் என்று ஜனாதிபதி தரப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் புதுடில்லி பயணம் எதிர்வரும் புதன் அல்லது வியாழக்கிழமை இந்தப் பயணம் நிகழும் என்று ஜனாதிபதி பிரதிநிதித்துவப்படுத்தும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப்பிரிவு அதிகாரி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி புதுடில்லி செல்வதற்கான இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பை இந்திய வெளிவிவகார 15

## அமைச்சரவை மாற்றம் இப்போதைக்கு இல்லை!

கொழும்பு, ஏப். 03

அண்மைய நாட்களாக பெரிதும் பேசப்பட்டு வந்த அமைச்சரவை மாற்றம் தற்போது இடம்பெறாது என்று கூறப்படுகின்றது.

அமைச்சரவை மாற்றம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் பொதுஜன பெரமுன பல கோரிக்கைகளை முன்வைத்தது. இந்த வேளைகளில், அரசமைப்புத் திருத்தம், 75ஆவது சுதந்திர தினம், சர்வதேச நாணய நிதியக் கடன் பெறப்பட்ட பின்னர் அமைச்சரவை 15

## புதிய அரசமைப்பு குறித்து அடுத்த வாரம் பிரேரணை!

கொழும்பு, ஏப். 03

புதிய அரசமைப்பு திருத்தம் தொடர்பான பிரேரணை அடுத்த அமைச்சரவை கூட்டத்தில் முன்வைக்கப்படும் என்று தெரிய வருகின்றது.

இந்த அரசமைப்பு திருத்தம் மரண தண்டனை பெற்ற குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்கும் முறையை மாற்ற முன்மொழிகிறது.

தற்போதைய ஏற்பாட்டின்படி மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒருவருக்கு மன்னிப்பு வழங்க ஜனாதிபதி தீர்மானித்தால் 15

## மகிந்த ராஜபக்ஷ மீண்டும் பிரதமர்?



கொழும்பு, ஏப்.03

மகிந்த ராஜபக்ஷ மீண்டும் பிரதமர் பதவியை பெறுவதற்கான வியூகங்களை வகுக்க ஆரம்பித்துவிட்டார் என்று தகவல்கள் வெளிவருகின்றன.

சோதிடத்தில் அதீத நம்பிக்கை கொண்டவரான அவருக்கு எதிர்வரும் மே 15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

மேலை நாடுகளில் அவர் ஆண் பிள்ளையோ, பெண் பிள்ளையோ எப்போது தனக்கு பதினெட்டாவது பிறந்தநாள் வரும் என்று காத்திருப்பார்கள்.

அநேகமானோர் தமது பதினெட்டாவது பிறந்த தினத்தை தனிக்குடித்தனம் போகின்ற இடத்தில்தான் கொண்டாடுவார்கள்.

அதாவது தமது பிள்ளைக்கு பதினெட்டு வயது வந்த பின்னரும் அந்தப் பிள்ளைக்கு விருப்பமில்லையென்றால் அவர்களை தம்மோடு கூடி வாழுங்கள் என்று நிர்ப்பந்திக்க முடியாது. அப்படி நிர்ப்பந்தித்தால் அந்தப் பிள்ளை பொலிஸ் நிலையம் போய்விடும்.

அதனால், அநேகமாக எல்லா பெற்றோருமே தமது பிள்ளைகள் பதினெட்டு வயதாகியதும் அவர்களுக்கு விருப்பமான தனிக்குடித்தனத்துக்கு ஏற்பாடு செய்து விடுவார்கள்.

மேற்கத்தைய இந்தக் கலாசாரம் அந்த நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் பெரும்பாலான குடும்பங்களிலும் தவிர்க்க முடியாத விடயமாகியிருக்கின்றது.

இவ்வாறு தனிக்குடித்தனம் போகும் பிள்ளைகள், தத்தமது பெற்றோரின் பிறந்தநாளுக்கு நேரில் வந்து வாழ்த்துகிறார்களோ இல்லையோ தந்தையர் தினம், அன்னையர் தினத்துக்கு கட்டாயம் நேரில் வந்து வாழ்த்தி, தம்மாலான பரிசுப் பொருட்களை வழங்கிச் செல்வார்கள்.

மேலைநாட்டவர்களின் குழந்தைகள் பெரும்பாலானோருக்கு வருடத்தில் இரண்டு தினங்களும் ஒரே வீட்டில் தாயையும் தந்தையையும் சந்திக்கின்ற சந்தர்ப்பங்களும் அநேகமாகக் கிடைப்பதில்லை. தந்தை வேறு ஒருவரை மறுமணம் செய்து ஓர் இடத்திலும், தாய் வேறு ஒருவரை மறுமணம் செய்து வேறு இடத்திலும் வாழ்வார்கள்.

இதையெல்லாம் ஏன் இப்போது இந்தப் பத்தியில் எழுதுகின்றீர்கள் என்று நீங்கள் நினைக்கலாம்.

நேற்றைய இந்தப் பத்தியில் தந்தை செல்வாவின் நூற்றி இருபத்தி ஐந்தாவது பிறந்த நாளுக்கு தமிழரசு கட்சியினர் இரண்டு அணிகளாக தனித் தனியாக அஞ்சலி செலுத்தியது பற்றி எழுதியிருந்தேன்.

அதனைப் படித்துவிட்டு, தமிழரசின் கொழும்புக் கிளையின் செயலாளராக நீண்டகாலம் பணியாற்றியவரும், யாழ்ப்பாணம் மாநகர சபையின் மேயர் வேட்பாளருமான நண்பர் என். வித்தியாதரன் பேசினார்.

அவர் சொன்னார், தமிழரசு தந்தை செல்வாவின் நினைவு தினத்தைத்தான் கட்சி ரீதியாக கொண்டாடுவது வழமை. பிறந்த தினத்தை அப்படி கொண்டாடுவதில்லை. இது அவரது நூற்றி இருபத்தி ஐந்தாவது பிறந்த தினம் என்பதால் அவரவர் தத்தமது வசதிப்படி சென்று அஞ்சலி செலுத்தினோமே தவிர, அதில் ஒரு பிரிவினை இல்லை என்று.

மேற்கு நாட்டவர் பிள்ளைகள் தத்தமது தாய், தந்தைக்கு தந்தையர் தினம், தாயார் தினம் கொண்டாடுவதுபோல, தமிழரசு தந்தை செல்வாவை வருடத்தில் ஒருநாள்தான் நினைவு கூருகின்றது என்ற உண்மையை இப்போதுதான் அறிய முடிந்தது.

சரி அதனை விடுவோம்.

இந்த நூற்றி இருபத்தி ஐந்தாவது பிறந்ததின அஞ்சலியில் அவரவரும் தத்தம் வசதிப்படி தான் அஞ்சலி செலுத்தினார்கள்.

தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் பிறந்த நாளோ, நினைவுநாளோ அ. தி. மு. க வினர் அஞ்சலி செலுத்துவார்கள்.

அ. தி. மு. க. சசிகலா தலைமையில் ஓரணியாகவும் பன்னீர்செல்வம் தலைமையில் ஓரணியாகவும் இருந்தபோது இரு அணிகளும் தனித்தனியாக அஞ்சலி செலுத்தும், அதே போல பின்னர் ஈ. பி. எஸ்., ஓ. பி. எஸ். இருவரும் இரு அணிகளாக பிரிந்தபோதும் இப்படித்தான் நடந்தது. ஆனால், இவர்கள் இருவரும் மனதால் ஒன்றிணையாவிட்டாலும் ஒன்றாக செயல்பட்ட காலத்தில் ஒன்றாகத்தான் அஞ்சலி செலுத்தினார்கள்.

இப்போது மீண்டும் பிரிந்துவிட்டதால் இனியும் தனித்தனியாகத்தான் நடக்கும்.

ஈ. பி. எஸ். அஞ்சலி செலுத்தப் போகும்போது தனக்கு நெருக்கமானவர்களை அழைத்துக்கொண்டு போவார். பிறகு ஓ. பி. எஸ். போகும்போது தனக்கு நெருக்கமானவர்களை அழைத்துக்கொண்டு செல்வார்.

அதுபோலத்தான் தந்தைக்கு அஞ்சலி செலுத்தச் செல்லும் போது மாவை சேனாதியர், தனக்கு நெருக்கமான ஆனல்ட், கனகசபாபதி ஆகியோருக்கு அழைப்பு விடுத்து ஒன்றாகப் போயிருந்தார்.

பின்னர், சீ. வீ. கேயர், அஞ்சலி செலுத்தும்போது தனக்கு நெருக்கமான சிலருடன் போயிருக்கிறார்.

இதுதான் கோஷ்டி என்பதன் வரைவிலக்கணம் என்று நினைக்கிறேன்.

மாவையர் அந்த நேரத்தில் செல்வது ஆனல்ட்டுக்கு எப்படித் தெரியுமோ? அதேபோல அந்த நேரம் போகவிருப்பதை ஒரு கட்சித் தலைவர் தனது கட்சியில் இருக்கின்ற தனக்கு பிடித்தமானவர் - பிடிப்பு இல்லாதவர் என்று பார்த்து அழைத்துச் செல்வது கட்சியில் பிளவு இருப்பதை வெளிச்சம் போடும் என்பது அவருக்கு தெரியாததல்ல.

**- ஊர்க்குருவி**

# ஒத்திவைத்த உள்ளூராட்சி தேர்தலுக்கு ரூ. 13 கோடி செலவிட்ட தேர்தல் குழு

கொழும்பு, ஏப். 03

காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக தேர்தல் ஆணைக்குழு பெப்ரவரி மாத இறுதி வரை 13.1 கோடி ரூபாயை செலவிட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதில், 12. 7 கோடி ரூபாயை நிதி அமைச்சு தேர்தல் ஆணையத்துக்கு வழங்கியுள்ளது. அவை தொடர்ச்சியான செலவுகளுக்கு வழங்கப்படுகின்றன.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக தேர்தல் ஆணைக்குழு கோரிய மொத்தத் தொகை 932.6 கோடி ரூபாயாகும்.

எவ்வாறாயினும், குறித்த திகதிகளில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த முடியாத காரணத்தால் தற்போது உள்ளூராட்சி சபைகளின் கட்டுப்பாடு விசேட ஆணையாளர்களின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

முன்னரும் இவ்வாறான தொழில்நுட்ப காரணங்களால் பிற்போடப்பட்ட மாகாண சபைகள் தேர்தல் தற்போது 5 வருடங்களுக்கு மேலாக பிற்போடப்பட்டுள்ளது. எனவே, மாகாண சபைகள் மாகாண ஆளுநர்களால் ஆளப்படுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ-சி)

# இரத்தினசபாபதி நினைவு உதைபந்து நெல்லியடி மத்திய கல்லூரி சம்பியன்!

வடமராட்சி, ஏப். 03

கணிதப் பேராசான் இரத்தினசபாபதி நினைவு உதைபந்தாட்ட கிண்ணத்தை நெல்லியடி மத்திய கல்லூரி கைப்பற்றியது.

பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி - நெல்லியடி மத்திய கல்லூரிகளின் முன்னாள் கணித பேராசான் இரத்தின சபாபதி நினைவாக இரு கல்லூரிகளிடையேயும் உதைபந்தாட்டப் போட்டி நடத்தப்பட்டது.

நேற்று முன்தினம் பிற்பகல் நெல்லியடி மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்க தலைவர் மருத்துவர் வே. ம. கமலநாதன் தலைமையில் நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் இந்தப் போட்டி நடைபெற்றது.

இதில், 14 வயதுக்கு உட்பட்ட மாணவர்களுக்கான போட்டியில் நெல்லியடி மத்திய கல்லூரி 6 கோல்களை அடித்து வெற்றியை தன்வசமாக்கியது.

இதைத் தொடர்ந்து 20 வயது பிரிவு அணிகள் மோதின. இந்தப் போட்டி சம நிலையில் முடிந்தது. தொடர்ந்து சமநிலை தவிர்ப்பு உதை மூலம் வெற்றி தீர்மானிக்கப்பட்டது.

இதில் நெல்லியடி மத்திய கல்லூரி மூன்று கோல்களை அடித்தது. பதிலுக்கு பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி ஒரு கோலையே போட்டது. இதனால், இந்தப் போட்டியிலும் நெல்லியடி மத்திய கல்லூரி வெற்றியை சுவீகரித்தது.

பரிசளிப்பு நிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் சிவக்கொழுந்து சற்குணராசா பிரதம விருந்தினராக கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபர் ரி. கலைச்செல்வன், நெல்லியடி மத்திய கல்லூரி அதிபர் ஜி. கிருஸ்ணகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர். வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை பிரதம, சிறப்பு, கௌரவ விருந்தினர்கள் வழங்கி வைத்தனர்.

முன்னதாக காலையில் பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி - நெல்லியடி மத்திய கல்லூரிகளின் பழைய மாணவர்களுக்கான போட்டியில் ஹாட்லி கல்லூரியும் ஆசிரியர்களுக்கான போட்டியில் நெல்லியடி மத்திய கல்லூரியும் வெற்றிபெற்றன.

(ஐ-02)

# ரஷ்ய பிரஜை மீது தாக்குதல் மீனவர் பொலிஸாரால் கைது

கொழும்பு, ஏப். 03

வெலிகம பல்பொருள் அங்காடியில் வரிசையை தவிர்த்த ரஷ்ய பிரஜையை போத்தலால் தாக்கிக் காயப்படுத்திய மீனவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வெலிகம பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலில் காயமடைந்த ரஷ்ய பிரஜை மாத்தறை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

32 வயதுடைய ரஷ்ய பிரஜை வெலிகம நகரிலுள்ள பல்பொருள் அங்காடிக்கு மதுப் போத்தல் ஒன்றைக் கொள்வனவு செய்ய சென்றதாகவும், அங்கு வரிசையில் நிற்காமல், அதனை தவிர்த்து மதுப் போத்தல் ஒன்றைக் கொள்வனவு செய்ய வரிசையில் நின்ற மீனவர் ஒருவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். அப்போது ஏற்பட்ட வாக்கு வாதத்தில், ரஷ்ய பிரஜை மீனவரை தாக்கியதாகவும், பின்னர் மீனவர் போத்தல் ஒன்றினால் ரஷ்ய பிரஜையை தாக்கியதாகவும் பொலிஸார் கூறினர்.

சம்பவம் தொடர்பில் வெலிகம பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(அ)

# விமான நிலையத்தில் எண்ணெய் களஞ்சியம்

கொழும்பு, ஏப். 03

விமான எரிபொருள் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக 35,000 மெற்றிக் தொன் எரிபொருளை சேமிப்பதற்கான களஞ்சியசாலையை நிறுவுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கான அனுமதியை தனியார்துறைக்கு வழங்கப்பட்டுள்ளதாக துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

இதேவேளை, சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக வருகை முனையத்தில் 25 குடிவரவு கவுண்டர்கள் நிறுவப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

(அ)

# ஆடை ஏற்றுமதியில் வீழ்ச்சி

கொழும்பு,ஏப். 03

ஆடை ஏற்றுமதி வருமானம் குறைந்து வருவதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. மத்திய வங்கியின் பொருளாதார ஆய்வுத் திணைக்களம் கடந்த 31ஆம் திகதி வெளியிட்ட இவ்வருட பெப்ரவரி மாதத்திற்கான வெளிநாட்டுத் துறையின் செயற்பாடுகளைக் காட்டும் அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு பெப்ரவரியில் ஆடை ஏற்றுமதி வருமானம் 496.4 மில்லியன் டொலர்களாக இருந்த நிலையில் இவ்வாண்டு பெப்ரவரியில் அது 431.3 மில்லியன் டொலர்களாக குறைந்துள்ளதாக அந்த அறிக்கை தெரிவிக்கின்றது.

2022 ஆம் ஆண்டு ஜனவரி மற்றும் பெப்ரவரி ஆகிய இரண்டு மாதங்களில் ஆடை ஏற்றுமதியில் 1012.5 மில்லியன் டொலர்கள் ஈட்டப்பட்டுள்ளதாகவும், இவ்வருடத்தின் முதல் இரண்டு மாதங்களில் அந்த நிலைமை 15.5 வீதத்தால் குறைந்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

Eelanadu ஈழநாடு
03.04.2023 திங்கட்கிழமை
பிலவ வருடம், பங்குனி 19

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# சஜித் பிரேமதாஸவின் அச்சம்?

நாடு ஜனாதிபதித் தேர்தல் ஒன்றை நோக்கி நகர்கின்றது. ரணில் விக்கிரமசிங்க வேட்பாளராகக் களமிறங்குவாரென்பதில் சந்தேகமில்லை. ரணிலின் கடந்த காலம் எதுவாக இருந்தாலும்கூட இன்றைய நிலையில், ரணில் விக்கிரமசிங்க தொடர்பான அபிப்பிராயங்கள் மாற்றமடைந் திருக்கின்றன. இவ்வாறானதொரு பின்புலத்தில், ஐக்கிய தேசியக் கட் சியை முற்றிலுமாக இல்லாவிட்டாலும் கணிசமானளவுக்கு பலப்படுத்து வதில் கவனம் செலுத்தப்படலாம். இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தமது கட்சியை உடைக்கும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபடுவதாகக் குற்றம் சாட்டி யிருக்கின்றார். இதன் மூலம் ஐக்கிய மக்கள் சக்திக்குள் பிளவுகள் ஏற்படு மென்று சஜித் பிரேமதாஸ அச்சப்படுவது தெளிவாகின்றது.

சஜித் பிரேமதாஸ ஐக்கிய தேசியக் கட்சியை உடைத்ததன் காரண மாகவே ஐக்கிய மக்கள் சக்தி உருவாகியது. சஜித் பிரேமதாஸ ஐக்கிய தேசியக் கட்சியை உடைத்தது நாட்டு மக்களின் நன்மைக்காகவல்ல. தனது தந்தைபோல் தானும் ஜனாதிபதியாக வேண்டுமென்னும் ஆசை யினால்தான் அவர் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியேறினார். இதேபோன்று, சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவாக பெரும்பான்மையான பாராளுமன்ற உறுப்பினர்களும் வெளியேறினர். ரணிலுடன் இருந்தால் தாங்கள் தோல்வியடைந்து விடுவொமென்னும் அச்சத்தினாலேயே அவர்கள் அனைவரும் வெளியேறினர்.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால், முன்னர் ரணிலின் பக்கமாக இருந்தால் தோற்றுவிடுவோமென்று அஞ்சியவர்கள் தற்போது, ரணி லுடன் இணைந்தால் தங்களுக்கு நன்மையென்று கருதினால் – சஜித் பிரேமதாஸவை விட்டு வெளியேறுவதற்குத் தயங்கமாட்டார்கள். ஏனெ னில், இங்கு எந்தவொரு கூட்டும் – எந்தவொரு உடைவும் நாட்டு மக்களின் நன்மை கருதி முன்னெடுக்கப்படுவதில்லை.

இந்த நிலையில், ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து பலர் வெளியேறினால் அதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. பொதுவாகவே தென்னிலங்கை அரசியலைப் பொறுத்தவரையில் ஒரு கட்சியிலிருந்து பிறிதொரு கட்சிக்கு செல்வது சாதாரணமானதொரு விடயமாகும். அதனை சிங்கள மக்களும் பெரிதுபடுத்துவதில்லை. இதேபோன்றுதான் முஸ்லிம்கள் மத்தியிலும். ஆனால், தமிழ் அரசியல் சூழலில் நிலைமை முற்றிலும் மாறுபட்டது. கட்சி மாறுபவர்கள் தமிழ் மக்கள் மத்தியில் ஆதரவை பெறுவது சற்றுக் கடினமானது. எனினும், கடந்த பாராளுமன்ற தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்ட கூட்டமைப்பின் உறுப்பினர் ஒருவரால் வெற்றிபெற முடிந்தது. அதிலும் மொட்டு சின்னத்தில். இது தமிழ்த் தேசிய அரசியலுக்கானதோர் எச்சரிக்கையாகவும் இருக்கின்றது.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பதாக, ரணில் விக்கிரமசிங்க தன்னை பலப்படுத்த வேண்டியிருக்கின்றது. ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்தால், நிச்சயம் அவர் அதனைச் செய்துதான் ஆக வேண்டும். தற் போதைய சூழலில், ரணில் விக்கிரமசிங்கவை எதிர்த்துக் களமிறங்கக் கூடியவர்களின் வாக்குகளை பெறக்கூடிய வல்லமையுடன் இருப்பவர்க ளென்றால் சஜித் பிரேமதாஸ மற்றும் அநுரகுமார திஸநாயக்க ஆகிய இருவரே முதன்மையானவர்கள். இவ்வாறானதொரு சூழலில், ஐக்கிய தேசியக் கட்சியை கட்டமைப்பு சார்ந்து பலப்படுத்த வேண்டிய தேவை யுண்டு.

அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியை அல்லது ரணிலை நோக்கி பலரும் அணி சேர்கின்றனர் – என்றவாறான, அரசியல் தோற்றப்பாட் டையும் காண்பிக்க வேண்டிய தேவையுண்டு. இந்தப் பின்புலத்தில் நோக்கினால் வெளியிலிருக்கும் பலரையும் தன்னை நோக்கி வருவதற் கான வியூகங்களை வகுக்க வேண்டிய அவசியத்தை ரணிலால் தவிர்க்க முடியாதுதான். ஆனால், சஜித் தன்னை பலமாக உணர்ந்தால் கட்சியை உடைக்க முற்படுவதாக அச்சப்பட வேண்டியதில்லை. சஜித்தின் அச்சம் அவரின் தலைமைத்துவ தகுதியின்மையின் விளைவா?

# உலக வங்கியின் 750 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் தாமதம்

*கொழும்பு, ஏப். 03*

நாட்டில் சமுர்த்தி பெறுநர் பட்டியல் உரியமுறையில் சரி பார்க்கப்படவில்லை என்ற காரணத்தினால் உலக வங்கியின் 750 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் தாம தமாகியுள்ளதாகத் தகவல்கள் வெளி யாகியுள்ளன. இந்த நிலையில், ஏப்ரல் 10ஆம் திகதிக்குள் உரிய ஆவணத்தை நிறைவு செய்ய முடியும் என்று அரசாங்கம் நம்பிக்கை வெளி யிட்டுள்ளது.

பயனாளிகளின் சரி பார்ப்பு மார்ச் 31ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்குள் முடிக்கப்படவே வண்டும். எனினும் இப்போது ஏப்ரல் 10ஆம் திகதி வரை அது ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக உலக வங்கியின் 750 மில்லியன் அமெரிக்க டொலரைப் பெற்றுக் கொள்ளும் செயல்முறை தாமதமாகியுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ், பெறுநர்களுக்கு மாதம் 14,000 ரூபா வழங்கப்படும்.

மேலும், பல சமுர்த்தி பயனாளிகள் வறு மைக் கோட்டிற்குக் கீழே இல்லை என்றும், அதனால், நன்மைகளைப் பெறுவதற்கு அவர்களுக்கு உரிமை இல்லை என்றும் சர்வ தேச நாணய நிதியமும் உலக வங்கியும் சுட்டிக்காட்டியுள்ளன.

இதனையடுத்து, உண்மையான பயனாளிக ளின் பட்டியலைத் தயாரிக்குமாறு அந்த அமைப்புக்கள் இலங்கை அரசாங்கத்திடம் கோரியுள்ளன. அத்துடன், இந்த இரண்டு அமைப்புகளும் அரசாங்கத்துக்கு முன்னி பந்தனைகளையும் விதித்துள்ளன.

பாராளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்ட அலுவலகம் திறக்கப்பட வேண்டும், வருமான சேகரிப்பு மற்றும் உள்நாட்டு வருமானத்தின் கொடுப்பனவுகளை டிஜிற்றல் மயமாக்குதல் வேண்டும், மற்றும் மத்திய வங்கியில் சீர்திருத் தங்கள் என்பவையும் இந்த முன் நிபந்தனை களில் அடங்குகின்றன.

எனினும், இவை இன்னும் நிறைவேற்றப் படவில்லை என்பதை இலங்கை அரச அதி காரி ஒருவர் ஏற்றுக்கொண்டதாக ஆங்கில ஊடகம் ஒன்று கூறுகிறது.

அத்துடன், அரசாங்கம் சமூகப் பாது காப்பு யோசனையை அறிமுகப்படுத்த வேண் டும் என்று குறிப்பிட்டுள்ள திறைசேரியின் மூத்த அதிகாரி ஒருவர், இந்த யோசனை இந்த மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

சமூக நலன்களுக்காக இதுவரை 3.7 மில்லி யன் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

இதில், 2.4 மில்லியன் விண்ணப்பதாரர்கள் இன்றுவரை சரி பார்க்கப்பட்டதாகவும் நலன்புரி நன்மைகள் சபையின் தலைவர் பி. விஜேரத்ன தெரிவித்துள்ளார். (அ)

# ரயில் மோதி ஒருவர் பலி!

*கொழும்பு, ஏப். 03*

மொல்லிகொட பகுதி யில் ரயில் பாதையில் நேற் றுக் காலை அமர்ந்திருந்த நபர் மீது எரிபொருள் ஏற்றிச் சென்ற ரயில் மோதியதில் அவர் உயிரிழந்தார் என வாதுவ பொலிஸார் தெரி வித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் வாதுவ, மொல்லிகொட, புனித பற்றிக் வீதியில் வசித்த குணசிங்க சமந்த சந்திர குமார டி சில்வா (வயது-36) என்ற ஒரு பிள்ளையின் தந்தை என பொலிஸார் கூறி னர்.

மருதானையில் இருந்து மாத்தறை நோக்கி எரி பொருளை ஏற்றிச் சென்ற ரயிலில் மொல்லிகொட பகுதி யில் சென்றபோது குறித்த நபர் மோதுண்டு உயிரிழந் துள்ளார்.

அவரது சடலம் களுத் துறை வடக்கு ரயில் நிலை யத்திற்கு கொண்டு செல்லப் பட்டது. (அ)

# பளை தோட்டக் காணியில் ஆண் ஒருவர் சடலமாக மீட்பு

*கிளிநொச்சி, ஏப். 03*

பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள தோட்ட காணி ஒன்றில் இருந்து ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்ட வர் அப்பகுதியை சேர்ந்த கணபதிப்பிள்ளை முருகேசம் பிள்ளை என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நேற்று முன் தினம் சனிக்கிழமை வீட்டில் இருந்து வெளியே சென்ற நிலையில் காணாமல் போயி ருந்தார். அவரை வீட்டார் தேடி வந்த நிலையில் அப் பகுதியில் உள்ள தோட்டக் காணி ஒன்றினுள் சடலமாக காணப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பளை பொலிஸாருக்கு அறி விக்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், சடலத்தை மீட்டு உடற்கூற்று பரிசோத னைக்கு அனுப்ப நடவ டிக்கை எடுத்ததுடன் விசார ணைகளையும் முன்னெடுத் துள்ளனர். (அ)

# வெதுப்பக பொருட்களின் விலை குறைக்கப்படலாம்


*கொழும்பு, ஏப். 03*

வெதுப்பக பொருட்க ளின் விலை எதிர்வரும் வாரத்தில் அறிவிக்கப்படும் என அகில இலங்கை பேக்கரி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன தெரிவித்தார்.

230 ரூபாயாக ஒரு கிலோ கோதுமை மாவின் விலை தற்போது 210 ரூபாயாக குறைந்துள்ளபோதிலும், வெதுப்பக தொடர்பான உணவுப் பொருட்களின் விலைகளில் குறையவில்லை.

இந்நிலையிலேயே விலை குறித்து அடுத்த வாரமள வில் அறிவிக்கப்படும் என அகில இலங்கை பேக்கரி உற் பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் குறிப்பிட்டார். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஈழநாடு



ஏப்ரல் - 03 திங்கட்கிழமை
சுபகிருது வருடம் - பங்குனி 20
நல்ல நேரம் : 06.00 - 07.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : திரையோதசி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். உங்களின் உடல்நலம் சீராகும். அதிகாரிகள் வலிய வந்து உதவுவார்கள்.

**இடபம்**
தாயாருடன் கருத்து மோதல்கள் வந்து நீங்கும். வியாபாரத்தில் அதிரடியான செயல்களால் போட்டிகளை சமாளிப்பீர்கள். தலைமையின் ஆதரவு கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**மிதுனம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**கடகம்**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். எதிர்பார்த்த தொகை கைக்கு வரும். புதிய சரக்குகள் கொள்முதல் செய்வீர்கள். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் வரும். மனசாட்சிபடி செயல்படும் நாள்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களிடம் கனிவாகப் பேசி பழகுங்கள். உத்தியோகத்தில் கவனம் செலுத்துவது நல்லது.

**கன்னி**
கணவன் மனைவிக்குள் மனஸ்தாபம் வந்து நீங்கும். ஆடம்பரச் செலவுகளால் சேமிப்புகள் கரையும். வியாபாரத்தில் பாக்கிகளை நயமாகப் வசூலிக்கப்பாருங்கள். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**துலாம்**
சமாளிக்கும் மனப்பக்குவம் கிடைக்கும். காணாமல் போன ஆவணங்கள் கிடைக் கும். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும்.

**விருட்சிகம்**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். வியாபாரத்தில் புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். உத்தியோகத்தில் புது பொறுப்புகளை ஏற்பீர்கள். முயற்சியால் முன்னேறும் நாள்.

**தனுசு**
கணவன் மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் கொஞ்சம் அலைச்சலும் சிறுசிறு ஏமாற்றமும் வந்து போகும். வியாபாரத்தில் வேலையாட்கள் அதிருப்தி அடைவார்கள். உத்தியோகத்தில் ஈகோ பிரச்சினை வந்து நீங்கும்.

**கும்பம்**
பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். தாயாரின் உடல் நிலை சீராகும். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் புது சலுகைகள் கிடைக்கும்.

**மீனம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். வியாபாரத்தில் நவீன யுக்திகளை கையாளுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள். தொட்டது துலங்கும் நாள்.

# பா. ஜ. கவுக்கு எதிராக கட்சிகளை ஒருங்கிணைக்கிறார் ஸ்டாலின்!

## இன்று காணொலி வழியாக கூட்டம்



சென்னை, ஏப். 03

பாராளுமன்றத் தேர்தலில் பா. ஜ. கவுக்கு எதிராகக் கட்சிகளை ஒன்றிணைக்கும் முயற்சியாக, சமூகநீதி குறித்து இன்று திங்கட்கிழமை காணொலி கூட்டத்துக்கு முதல்வர் மு. க. ஸ்டாலின் ஏற்பாடு செய்துள்ளார்.

இதில், தேசிய அளவில் பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்கவுள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது. 2024ஆம் ஆண்டு நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலை முன்னிறுத்தி, பா. ஜ. கவுக்கு எதிராக அனைத்து கட்சிகளையும் ஒருங்கிணைக்கும் முயற்சியில் முதல்வர் மு. க. ஸ்டாலின் ஈடுபட்டுள்ளார். இதற்காக அவர் பல்வேறு கட்டமுயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

கடந்த 2022ஆம் ஆண்டு அனைத்திந்திய சமூக நீதி கூட்டமைப்பை அறிவித்த முதல்வர் மு. க. ஸ்டாலின், இதில் இணையும்படி நாடு முழுவதும் பா. ஜ. க. தவிர்த்து காங்கிரஸ் உள்ளிட்ட அனைத்து கட்சிகளின் தலைவர்கள், தமிழகத்தில் உள்ள கூட்டணி கட்சிகளின் தலைவர்கள் என 38 பேருக்கு அழைப்பு விடுத்தார்.

இதில், காங்கிரஸ் சார்பில் வீரப்பமொய்லியை சோனியா காந்தி உறுப்பினராக அறிவித்தார். தொடர்ந்து கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைவர்களும் முதல்வரின் இந்த முயற்சியைப் பாராட்டியதுடன், ஆதரவும் தெரிவித்திருந்தனர்.

தொடர்ந்து, கடந்தாண்டு பெப். 27ஆம் திகதி முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுதிய சுயசரிதை நூலான 'உங்களில் ஒருவன்' முதல்பாகம் வெளியீட்டு விழா சென்னைநந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நடைபெற்றது. இதில், பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்றனர். இந்த விழாவானது, பா. ஜ. கவுக்கு எதிரான கட்சிகளை ஒருங்கிணைக்கும் விழாவாக மாறியுள்ளதாக அப்போதே அரசியல் நோக்கர்கள் கருத்து தெரிவித்தனர்.

இதைத்தொடர்ந்து, கடந்த மார்ச் 1 ஆம் திகதி முதல்வர் மு. க. ஸ்டாலின் பிறந்தநாள் விழா நடைபெற்றது. இதிலும், காங்கிரஸ் தேசிய தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, தேசிய மாநாட்டு கட்சித் தலைவர் பரூக் அப்துல்லா, ராஷ்ட்ரிய ஜனதாதளம் தலைவர் தேஜஸ்வி யாதவ், சமாஜ்வாதி தலைவர் அகிலேஷ் யாதவ் உள்ளிட்டோர் பங்கேற்றனர். இதில், நேரடியாக அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம் என்று அழைப்பு விடுத்தார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

அனைத்து நிகழ்வுகளிலும் சமூகநீதியை முன்னிறுத்தி வரும் முதல்வர் மு.க.ஸ்டாலின், பாராளுமன்றத் தேர்தலை கருத்தில் கொண்டுஅடுத்தகட்டமாக அனைத்து கட்சிகளையும் ஒருங்கிணைக்கும் நடவடிக்கையை எடுத்துள்ளார்.

இந்நிலையில், பாஜகவுக்கு எதிரான மனப்பான்மையில் இருக்கும் கட்சிகளின் தலைவர்களுடன் இன்று காணொலி வாயிலாக ஆலோசனை நடத்த முடிவெடுத்துள்ளார். இதுபற்றி அனைத்து தலைவர்களுக்கும் அவர் அழைப்புவிடுத்துள்ளார்

இந்தக் கூட்டத்தில் தேசிய அளவிலான பல கட்சிகளின் தலைவர்களும் பங்கேற்க உறுதியளித்துள்ளனர். அத்துடன், தமிழ்நாடு கட்சிகளின் தலைவர்கள், பிரதிநிதிகளும் இதில் பங்கேற்பர். அத்துடன், சமூகநீதி சார்ந்த அமைப்புகளின் தலைவர்களும் இதில் பங்கேற்பர் என்று தெரிய வருகின்றது.

மேலும், இது புதிய கூட்டணிக்கான அச்சாரமாகவும் பார்க்கப்படுகின்றது. (ஐ)

# ஸ்டாலினுடன் கைகோக்க சமூக நீதியே ஒரே காரணம்!

## தொல். திருமாவளவன்

சென்னை, ஏப். 03

எம்மை போன்றவர்கள் மு. க. ஸ்டாலினோடு கைகோத்து நிற்பதற்கு ஒரே காரணம்தான். தேர்தலுகாக அல்ல சமூக நீதிக்காகதான் என்று கூறியிருக்கிறார் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தொல். திருமாவளவன்.

முதலமைச்சர் மு. க. ஸ்டாலினோடு கைகோத்து நிற்பது குறித்து திருமாவளவன் எம்.பி. பேசுகையில்,

முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் திராவிட இயக்கத்தின் நான்காம் தலைமுறைக்கு தலைமை தாங்குகிறார். பெரியாருக்கு பின்னர் அண்ணா, அண்ணாவுக்கு கலைஞர் கருணாநிதி, கருணாநிதிக்கு பிறகு மு. க. ஸ்டாலின். திராவிட இயக்கத்தின் கொள்கைகளை பாதுகாத்து வருகிற ஒரு மகத்தான பணியை ஏற்றுக் கொண்டு பெரியார் வழியில் அண்ணா கட்டிக் காப்பாற்றிய சமூக நீதி அரசியலை தலைவர் கலைஞர் ஓங்கி பாதுகாத்த சமூக நீதி அரசியலை இன்றைக்கு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் வெற்றிகரமாக முன்னெடுத்து செல்கிறார்.

எம்மை போன்றவர்கள் எல்லோரும் இன்றைக்கு மு. க. ஸ்டாலினோடு கைகோத்து நிற்பதற்கு ஒரே காரணம் தான். தேர்தலுகாக அல்ல சமூக நீதிக்காகதான் - என்றார். (ஐ)

# தமிழ்நாட்டில் புதிதாக 8 மாவட்டங்கள் உருவாகும்!

சென்னை, ஏப். 03

தமிழகத்தில் புதிதாக 8 மாவட்டங்களை உருவாக்குவது தொடர்பான கோரிக்கைகள் வந்துள்ளதாகவும் அவற்றைப் பரிசீலிப்பது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் முடிவெடுப்பார் என்றும் அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் கூறினார்.

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது, புதிய மாவட்டங்கள் உருவாக்கம் தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்தபோதே, அமைச்சர் ராமச்சந்திரன், தமிழகத்தில் 8 புதிய மாவட்டங்களை உருவாக்க வேண்டும் என்று சட்டப்பேரவை உறுப்பினர்கள், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கோரிக்கை மனு அளித்துள்ளனர். இதுதவிர, வருவாய்க் கோட்டம், வட்டங்களை பிரிப்பது குறித்தும் கோரிக்கைகள் வந்துள்ளன.

புதிய மாவட்டங்களை உருவாக்குவது தொடர்பாக நிதி நிலை அடிப்படையில் பரிசீலித்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் உரிய முடிவெடுத்து அறிவிப்பார்- என்றார்.

# ஐக்கிய மக்கள் சக்தியை உடைக்க ரணில் முயற்சி!

## சாடுகின்றார் சஜித் பிரேமதாஸ



கொழும்பு, ஏப். 03

**ஐக்கிய மக்கள் சக்தியைப் பிளவுபடுத்துவதற்கான முயற்சிகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்து வருகிறார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.**

தெஹிவளையில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றின்போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

கட்சியின் சில உறுப்பினர்களுக்கு பணம் கொடுத்து, தமக்கான ஆதரவை பெற்றுக்கொள்ள அரசாங்க தரப்பினர் முயற்சித்து வருகின்றபோதிலும், அது சாத்தியப்படாது என சஜித் பிரேமதாஸ கூறினார்.

நாட்டை கட்டியெழுப்புவதற்கு பணமில்லாத இந்த அரசாங்கம், அவர்களது பக்கம் இணைத்துக் கொள்வதற்கு எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு பணம் கொடுக்க முயற்சிக்கின்றது.

ஆனால் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் பணமில்லாமல் எதிர்க்கட்சியுடன் இணைய தயாராக உள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒருபோதும் பணத்திற்காக தமது சுயமரியாதையை தாரைவார்க்கமாட்டார்கள்.

மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதன் மூலமும், வரிகளை அதிகரிப்பதன் மூலமும், வட்டி விகிதத்தை அதிகரிப்பதன் மூலமும் மக்கள் நசுக்கப்படுகின்றனர்.

அரசாங்கம் அரசியலமைப்பை மீறி தேர்தலை சீர்குலைத்து வருகிறது. அதையும் தாண்டி புதிய பயங்கரவாத தடைச் சட்டத்தைக் கொண்டு வந்து தொழிற்சங்க தலைவர்கள், பல்கலைக்கழக மாணவர்களையும் சாதாரண மக்களையும் பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்த அரசு முயற்சிக்கின்றது - என்றார். (அ)



# ஜனாதிபதி தலைமையில் தேசிய புத்தரிசி விழா

கொழும்பு, ஏப். 03

தேசிய புத்தரிசி விழா ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களின் தலைமையில் நேற்று அநுராதபுரத்தின் வரலாற்று சிறப்புமிக்க சிறி மஹாபோதிக்கு அருகில் இடம்பெற்றது.

அறுவடை செய்யப்பட்ட நெல்லின் முதற் பகுதியை ஜய சிறி மஹாபோதிக்கு காணிக்கையாகச் செலுத்தும் வருடாந்த புத்தரிசி விழா, அட்டமஸ்தானாதிபதி வண. பல்லேகேம ஹேமரதன நாயக்க தேரரின் ஆலோசனைக்கு அமைவாக விவசாய அமைச்சு மற்றும் கமநல சேவைகள் திணைக்களத்தினால் 56 ஆவது தடவையாக ஏற்பாடு செய்யப்பட்டது.

மன்னர் காலத்தில் இருந்து நடைபெற்று வரும் இந்த சம்பிரதாயத்திற்கு, நாடு முழுவதிலும் இருந்து ஏராளமான விவசாயிகள் திரண்டு வந்திருந்ததோடு, விவசாயத்தின் மூலம் நாடு தன்னிறைவு பெறவும், விளை நிலங்கள் செழிப்பாக இருக்கவும், சுபீட்சமிக்க பொருளாதாரம் ஏற்படவும் பிரார்த்தனை செய்தனர்.

புத்தரிசி விழாவில் கலந்து கொண்ட ஜனாதிபதி, முதலில் ஜய சிறி மஹாபோதியை வழிபட்டு ஆசி பெற்றார்.

அநுராதபுரம் சிங்கத் தூணுக்கு அருகிலிருந்து புறப்பட்ட புத்தரிசி ஊர்வலம் சிறி மஹா போதியை வந்தடைந்தது.

அட்டமஸ்தானாதிபதி வண. பல்லேகம ஹேமரதன நாயக்க தேரர், தங்கப் பாத்திரத்தில் புத்தரிசியை நிரப்ப ஆரம்பித்ததுடன், அனைத்து மாகாணங்களிலும் இருந்து கொண்டு வரப்பட்ட அரிசியால் தங்கப் பாத்திரம் நிரப்பப்பட்டது.

மகா சங்கத்தினரின் பிரித் பாராயணத்துக்கு மத்தியில் தங்கப் பாத்திரத்தில் அரிசியை நிரப்பும் நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் கலந்துகொண்டார்.

சம்பிரதாயபூர்வமாக ஜய சிறி மஹாபோதிக்கு காணிக்கையாக வழங்கப்படும் தேன் பூசைக்கான , தூய தேன் பானை உருவரிகே வன்னில அத்தோவினால் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

மஹாபோதிக்கு நெய் பூசைக்காக சப்ரகமுவ வரலாற்று சிறப்புமிக்க சமன் தேவாலயத்தில் இருந்து கொண்டுவரப்பட்ட நெய் பாத்திரமும், ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

பாரம்பரிய நெல் விவசாயிகளைப் பாதுகாக்கும் அமைப்பின் தலைவர் சிந்தன விலேகொட, ஜனாதிபதியின் வயதுக்கு நிகரான நெற்கதிர்கள் நிறைந்த நெல் மூட்டையொன்றை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடம் வழங்கினார்.

09 மாகாணங்களிலும் உள்ள விவசாயிகளுக்கு அந்தந்த பிரதேசங்களுக்கு பிரத்தியேகமான விதைகள் மற்றும் நெல் வகைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கினார்.

56 ஆவது தேசிய புத்தரிசி விழா நினைவு இதழின் டிஜிற்றல் அச்சுப்பிரதிகளும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டன. (அ)

# கராத்தே ஆசிரியர் மீது கதிர்காமத்தில் சூடு!

கொழும்பு, ஏப். 03

கதிர்காமம் - பழைய எழுமலை வீதியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்தார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே குறித்த துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதே பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய பிரதீப் லக்மால் என்ற 'உடவத்தே மஞ்சு' என்பவரே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

சந்தேகநபர் ஒரு கராத்தே ஆசிரியர் என்றும், சந்தேக நபர்கள் அவரை துரத்திச் சென்று துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த துப்பாக்கிச் சூட்டில் அவர் கால்களில் காயமடைந்துள்ளதாக பொலிஸார் மேலும் கூறினர். (அ)

# மொட்டிலிருந்து 'தொலைபேசி' பக்கம் தாவவுள்ளனர் ஐந்து முக்கியஸ்தர்கள்?

கொழும்பு, ஏப். 03

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பங்களிப்பு வழங்கும் சிறிலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்தில் இருந்து ஐந்து முக்கிய உறுப்பினர்கள் ஐக்கிய மக்கள் சக்தியில் இணையலாம் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது.

தற்போது இதற்கான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த விடயம் இறுதி அடைவதற்கு சிறிது காலம் எடுக்கும் என்று அரசாங்கத்தின் முக்கிய உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தைக்கு இடையூறு விளைவிக்கும் என்ற அடிப்படையில் பெயர் குறிப்பிட விரும்பாத அவர், சம்பந்தப்பட்டவர்களின் பெயர்களும் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளன என்றும் கூறினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பொருளாதார மீட்சிக் கொள்கை தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் எவரும் வேறுபட்ட கோரிக்கைகளை முன்வைக்கவில்லை என்றும் அவர் கூறினார். (அ)

# கோழி இறைச்சி விலை அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 03

சந்தையில் கோழி இறைச்சியின் விலை 260 ரூபாவினால் அதிகரித்துள்ளதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

பண்டிகைக் காலம் மற்றும் வார இறுதி என்பன காரணமாக கோழி இறைச்சியின் விலை அதிகரித்துள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை, அகில இலங்கை பாரிய மற்றும் நடுத்தர அளவிலான கோழிப்பண்ணை உற்பத்தியாளர் சங்கத்தின் தலைவர் அஜித் வீரசிங்கவிடம் கேட்டபோது, கோழிப்பண்ணை தொழில் ஏற்கனவே நட்டத்தை சந்தித்து வருவதாக குறிப்பிட்டார். (அ)

# இந்திய - இலங்கை கடல்சார் பயிற்சி இன்று கொழும்பில் ஆரம்பமாகிறது

கொழும்பு, ஏப். 03

இந்திய - இலங்கை இருதரப்பு கடல்சார் 10ஆவது பயிற்சி இன்று கொழும்பில் ஆரம்பமாகவுள்ளது.

குறித்த கடல்சார் பயிற்சி, துறைமுகம் மற்றும் கடல் என்ற இரண்டு கட்டங்களாக, இரண்டு நாட்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்திய கடற்படையை ஐ.என்.எஸ் கில்தான் மற்றும் ஐ.என்.எஸ் சாவித்ரி என்ற கப்பல்கள் பிரதிநிதித்துவப் படுத்துகின்றன.

அதேவேளையில் இலங்கை கடற்படையை விஜயபாகு மற்றும் சமுதுர ஆகிய கப்பல்கள் பிரதிநிதித்துவப் படுத்துகின்றன.

அத்துடன், இந்திய கடற்படை சேடக் உலங்கு வானூர்தி மற்றும் டோர்னியர் கடல் ரோந்து விமானம் மற்றும் இலங்கை விமானப்படையின் டோர்னியர் மற்றும் பெல் 412 உலங்கு வானூர்திகளும் இந்த பயிற்சியில் பங்கேற்கும்.

இந்தப் பயிற்சியில் இரு நாட்டு கடற்படைகளின் சிறப்புப் படைகளும் இணைந்து பங்கேற்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# சிறு குற்றக் கைதிகளுக்காக விசேடமான வேலைத் திட்டம்

கொழும்பு, ஏப். 03

சிறிய குற்றங்களுக்காக சிறையில் இருக்கும் கைதிகளை பாரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களுடன் பழகுவதை தடுக்கும் வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டு வருவதாக சிறைச்சாலை அமைச்சு தெரிவித்துள்ளது.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைத்த அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ இதனைக் குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பில் குழுவொன்று ஆராய்ந்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன்படி, சிறிய குற்றச்சாட்டுகள் தொடர்பில் நீதவானினால் சந்தேகநபர்களை சிறைச்சாலைகளுக்கு அனுப்பாது அவர்களது பெற்றோர்களின் பொறுப்பின் கீழ் வீட்டில் தடுத்து வைத்து கண்காணிப்பதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளது

இது தொடர்பான சட்டத் திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பிலும் குறித்த குழு ஆராய்வதாகவும் அமைச்சர் விஜேதாஸ கூறினார். (அ)

# பெரும்போக விவசாயிகளுக்கு 657 மில்லியன் ரூபா இழப்பீடு!

கொழும்பு, ஏப். 03

2021 ஆம் ஆண்டு பெரும்போகத்தில் ஏற்பட்ட பயிர்ச்சேதங்களுக்காக விவசாயிகளுக்கு 657 மில்லியன் ரூபா நட்டஈடாக வழங்கப்பட்டுள்ளதாக விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபை தெரிவித்துள்ளது.

மேலும், 2021 ஆம் ஆண்டுக்கான சிறுபோகத்தில் பயிர்ச் சேதத்திற்கான இழப்பீடு வழங்கல் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மேலும் 2021 பெரும்போக பருவத்தில் 25 மாவட்டங்களில் 31,613 விவசாயிகளின் பயிர்கள் சேதம் அடைந்துள்ளதுடன், 42,934 ஏக்கர் பயிர்ச்செய்கை நிலம் சேதமடைந்துள்ளதாகவும் உறுதி செய்யப்பட்டுள்ளது. (அ)

# உத்தியோகபூர்வ இல்லத்தை மீண்டும் வழங்கினார் ஹேமா!



கொழும்பு, ஏப். 03

மறைந்த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவுக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லம் மீண்டும் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அரசமைப்பு ரீதியாக முன்னாள் ஜனாதிபதி ஓர் உத்தியோகபூர்வ இல்லத்தை கொண்டுள்ளார். அவர் இறக்கும்போது, அவரின் மனைவிக்கு அந்த உத்தியோகபூர்வ வீட்டை பயன்படுத்த வாய்ப்புள்ளது.

இதனடிப்படையில் முன்னாள் ஜனாதிபதியின் மனைவி ஹேமா பிரேமதாஸ குறித்த வீட்டை பெற்றுக் கொண்டார். எனினும், ஹேமா பிரேமதாஸ கொழும்பில் உள்ள அந்த உத்தியோகபூர்வ இல்லத்தை ஒருபோதும் பயன்படுத்தியதில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் அந்த உத்தியோகபூர்வ இல்லத்தை அரசிடம் அவர் ஒப்படைத்துள்ளார். (ஐ)

# அரசின் செயல்பாடுகள் குறித்து அமெரிக்கா கடும் எச்சரிக்கை!



கொழும்பு, ஏப். 03

தேர்தல் ஒத்திவைப்பு, புதிய பயங்கரவாத சட்டத்தின் உள்ளடக்கங்கள், நீதிமன்ற தீர்ப்புகளில் அரசு தலையிடும் போக்கு தொடர்பில் அமெரிக்க தூதுவர் ஜூலி சங் கடும் எச்சரிக்கையை விடுத்துள்ளார் என்று நம்பகமாக அறிய வருகின்றது.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்த்தன ஆகியோருடனான சந்திப்பின்போதே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்தார் என்று அறிய வருகின்றது.

இதன்போது, அமெரிக்க அரசாங்கத்தின் இராஜதந்திர முறையில் அரசுக்கு அமெரிக்கா அளித்துள்ளதாக எமக்கு தகவல் கிடைத்துள்ளது. (ஐ-சி)

# 800 சாரதிகள், 275 நடத்துநர்கள் இ. போ. சவில் இணைக்கப்படுவர்!

கொழும்பு, ஏப். 03

800 சாரதிகள் மற்றும் 275 நடத்துநர்களை சேவையில் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

இதற்கான ஆட்சேர்ப்பு விரைவில் மேற்கொள்ளப்படும் என இ. போ. ச. தலைவர் லலித் டி அல்விஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை போக்குவரத்து சபையில் 1,035 சாரதி வெற்றிடங்கள் மற்றும் 450 நடத்துநர் வெற்றிடங்கள் இருக்கின்றன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய ஆட்சேர்ப்பு மூலம் இந்த வெற்றிடங்களின் எண்ணிக்கை குறையும் என இ. போ. ச. தலைவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# பெரமுனவுக்குள் முரண்பாடுகள் உச்சம் ஜனாதிபதி பக்கம் சாயும் அமைச்சர்கள்!

கொழும்பு, ஏப். 03

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவுக்குள் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடுகள் குறித்து தகவல்கள் வெளியாகியுள்ளன.

கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க ஜனாதிபதி தரப்புடன் மிகவும் நெருக்கமாக செயல்படுகிறார். இது தொடர்பில் ஏற்பட்டுள்ள பிரச்னை தொடர்பில் கலந்துரையாடப்பட்டு வருவதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை, பொதுஜன பெரமுனவில் இருந்து பாராளுமன்ற உறுப்பினர் பதவியைப் பெற்ற விஜயதாஸ ராஜபக்ஷ, சுசில் பிரேம ஜயந்த போன்ற மூத்தவர்கள் கட்சியுடன் இணைந்து செயல்படுவதில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதுதவிர, கீழ்மட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் ஜனாதிபதியின் நெருங்கிய சகாக்களுடன் நெருங்கிய தொடர்பில் இருக்கின்றனர் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதியால் உருவாக்கப்படும் புதிய அரசியல் கூட்டணியில் இந்த குழு இணையலாம் எனவும் சில தரப்பினர் தெரிவிக்கின்றனர். எவ்வாறாயினும், பொதுஜன பெரமுன அரசாங்கத்தின் அனைத்து தரப்பினரையும் ஒன்றிணைத்து முன்னோக்கிச் செல்லக்கூடிய வேலைத்திட்டம் ஒன்றை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி ஏற்கனவே வலியுறுத்தி இருந்தார்.

இதன்படி பொதுஜன பெரமுன தலைமை தனது கட்சியின் அதிகாரத்தை மேலும் பாதுகாக்க பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிகின்றது. (ஐ)

# 12 இலட்சம் ரூபாய் திருட்டு; 20 வயது இளைஞர் கைது!

வவுனியா, ஏப். 03

வவுனியாவில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் இருந்து 12 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் பணத்தை திருடினார் என்ற குற்றச்சாட்டில் 20 வயது இளைஞன் ஒருவர் சந்தேகத்தின் அடிப்படையில் நேற்று கைது செய்யப்பட்டார்.

வவுனியா - இலுப்பையடி பகுதியில் உள்ள பிரபல பல்பொருள் விற்பனை நிலையம் ஒன்றில் வங்கியில் வைப்புச் செய்வதற்காக தயார் செய்து வைக்கப்பட்டிருந்த 12 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் பணம் திருடப்பட்டதாக விற்பனை நிலைய உரிமையாளரால் கடந்த புதன்கிழமை வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த முறைப்பாடு தொடர்பில் வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜே. ஏ. ஏ. எஸ்.ஜெயக்கொடியின் வழிகாட்டலில் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் பரிசோதகர் ரி. கஜேந்திரன் தலைமையில் பொலிஸ் சார்ஜன்ட் திஸநாயக்கா (60945), பொலிஸ் கான்ஸ்டபிள்களான தயாளன் (91792), சியான் (105139) ஆகியோர் அடங்கிய பொலிஸ் குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

விசாரணைகளின் அடிப்படையில் அந்த வர்த்தக நிலையத்தில் கடமையாற்றி கொழும்பு சென்றிருந்த இளைஞரை ஒரு வரை பொலிஸார் சூட்சுமமான முறையில் வவுனியாவுக்கு வரவழைத்து வவுனியா பேருந்து நிலையத்தில் வைத்து கைது செய்தனர். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது குறித்த பணத்தில் 9 இலட்சம் ரூபாய் இளைஞனின் வங்கியில் உள்ளதாகவும், மிகுதி 3 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாயை செலவு செய்து விட்டதாகவும் தெரிவித்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வவுனியா, நீலியாமோட்டைப் பகுதியைச் சேர்ந்த 20 வயது இளைஞரே கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளின் பின் அந்த இளைஞரை வவுனியா நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)



# பசுமை அறிவொளி விழிப்புணர்வு நிகழ்ச்சி சிறுப்பிட்டியில் நடந்தது

யாழ்ப்பாணம், ஏப். 03

மாணவர்களுக்குச் சுற்றுச் சூழல் பற்றிய அறிவைப்புகட்டி அதனூடாக சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சி நேற்றுமுன்தினம் சனிக்கிழமை சிறுப்பிட்டியில் நடைபெற்றது.

மாணவர்களுக்குச் சுற்றுச் சூழல் பற்றிய அறிவைப்புகட்டி அதனூடாக சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களைச் சூழல் பாதுகாப்பில் பங்குபற்றுநர்களாக்கும் நோக்குடனும், மாணர்களிடையே பன்முக ஆளுமைத் திறனை விருத்தி செய்யும் நோக்குடனும் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் பசுமை அறிவொளி நிகழ்ச்சித் திட்டத்தை கிராமங்களில் முன்னெடுத்து வருகின்றது.

இதன் தொடர்ச்சியாகவே இந்தப் பசுமை அறிவொளி நிகழ்ச்சி சிறுப்பிட்டியில் அண்ணமா மகேஸ்வரர் ஆலய கலாசார மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் சிறுப்பிட்டி மேற்கின் இணைப்பாளர் கு. மயூதரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக கனடா - றொறன்ரோவின் மனிதநேயக்குரல் அமைப்பைச் சார்ந்த மரியாம்பிள்ளை மரியராசா கலந்து கொண்டிருந்தார்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் மாணவர்களின் வகிபாகம் தொடர்பாக உரையாற்றினார். தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் பொருளாளர் க. கேதீஸ்வரநாதனும் கலந்துகொண்டிருந்த இந்நிகழ்ச்சியில் நூற்றுக்கணக்கான மாணவர்களும் பெற்றோர்களும் பங்கேற்றிருந்தனர்.

நிகழ்ச்சியின் இறுதியில் மாணவர்கள் அனைவருக்கும் சூழல் விழிப்புணர்வு மேற்கோள்கள் மற்றும் புகைப்படங்கள் அடங்கிய அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன. இதற்கான அனுசரணையை றொறன்ரோவின் மனிதநேயக்குரல் அமைப்பு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 2022இல் சிறிலங்கன் எயார்லைன்ஸ் கோடிக்கணக்கான ரூபாய்கள் நட்டம்

கொழும்பு, ஏப். 03

இலங்கை மின்சார சபை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் சிறிலங்கன் எயார் லைன்ஸ் ஆகிய நிறுவனங்களுக்கு கடந்த வருடத்தின் முதல் எட்டு மாதங்களில் மாத்திரம் 85 ஆயிரத்து 400 கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகை நட்டம் ஏற்பட்டுள்ளதாக பாராளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவரும் இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான காமினி வலேபொட தெரிவித்தார்.

அரச நிறுவனங்களின் மொத்த நட்டத்தில் 99 வீதத்தை இந்த மூன்று நிறுவனங்களும் தோற்றுவித்துள்ளதாகவும் இந்த மூன்று நிறுவனங்களும் பல வருடங்களாக நட்டத்தில் இயங்கி வருவதால் பாரிய கடன் சுமை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

கடந்த வருடத்தின் முதல் எட்டு மாதங்களில் நாட்டின் 52 பிரதான அரச நிறுவனங்களின் நட்டம் 72 ஆயிரத்து 600 கோடி ரூபாவாகும். இந்த 52 நிறுவனங்களில் 32 அரச நிறுவனங்களின் வரிக்கு முந்திய இலாபம் 13 ஆயிரத்து 400 கோடி ரூபா எனவும் எஞ்சிய 20 அரச நிறுவனங்கள் 86 ஆயிரத்து 100 ரூபா நட்டம் அடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நிதி பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் நிதி முகாமைத்துவ அறிக்கையின் படி, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை மின்சார சபை இரண்டையும் முறையான நிதி முகாமைத்துவத்தின் கீழ் கொண்டு வருவதுடன், சிறிலங்கன் விமான சேவையை மறுசீரமைக்கவும் வேண்டும் என காமினி வலேபொட சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, 2022ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 4.3 சதவீதமாக இருந்த வேலையின்மை வீதம் அந்த ஆண்டின் இரண்டாவது காலாண்டில் 4.6 சதவீதமாக அதிகரித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

ஈழநாடு



# பாராளுமன்ற கூட்டத்தொடர் நாளை; ஆறு எம். பிக்கள் அரசு பக்கம் தாவுவர்?

கொழும்பு, ஏப். 03

**பாராளுமன்ற கூட்டத் தொடர் நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகிறது. இதன் போது, எதிர்க்கட்சிகளை சேர்ந்த சுமார் 6 பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் இணைவர் என்று கொழும்பின் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.**

இந்த ஆறு எதிர்க்கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களில் கொழும்பு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எம். பி. ஒருவரும், களுத்துறை மாவட்டத்தின் எம். பிக்கள் இருவரும், பதுளை மாவட்டத்தின் எம். பி. ஒருவரும் மற்று இரு சிறு கட்சிகளின் எம். பிக்களுமே அரசாங்கத்துடன் இணைவர் என்று கூறப்படுகின்றது.

இதேசமயம், சுயாதீனமாக இயங்கிவரும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் கட்சி மாறத் தயாராகி உள்ளனர் என்று தெரிய வருகின்றது. இவர்களில் சிலர் நாளைய தினம் அல்லது அடுத்த சில நாட்களில் கட்சி மாறுவர் என்று கூறப்படுகின்றது. (ஐ -சி)

# வரியை நீக்குவதற்கு அரசுக்கு இந்த வாரம் வரை காலக்கெடு!

## தொழில்சங்கங்களின் ஒன்றியம்

கொழும்பு, ஏப். 03

உழைக்கும்போது செலுத்தும் வரி உட்பட பல பிரச்னைகளுக்கு உரிய தீர்வுகளை வழங்க இந்த வாரம் வரை அரசாங்கத்துக்கு கால அவகாசம் வழங்க தொழில்சங்கங்களின் ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

இந்த வார இறுதிக்குள் தகுந்த முடிவு எடுக்கப்படாது விட்டால் பின்னர், தொடர் தொழில்சங்க நடவடிக்கையில் ஈடுபட தொழில்சங்கங்கள் முடிவு செய்துள்ளன.

எனினும், தொழில்சங்க ஒன்றியத்தின் இந்த முடிவுக்கு வங்கிகள் உட்பட பல தொழில்சங்கங்கள் இணங்கவில்லை எனவும், வேறு வழியில் தொழில்சங்க போராட்டத்துக்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# உள்ளூராட்சி எல்லை நிர்ணய அறிக்கை இவ்வாரம் பிரதமரிடம்!

கொழும்பு, ஏப். 03

உள்ளூராட்சி தொகுதி எல்லை நிர்ணய அறிக்கையை இந்த வாரத்துக்குள் உள்ளூராட்சி சபை அமைச்சர் மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் சமர்ப்பிக்கவுள்ளதாக தேர்தல் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இந்த ஆணைக்குழுவின் காலம் மார்ச் 31ஆம் திகதியுடன் முடிவடைந்தது. ஆனால், பணிகள் நிறைவடையவில்லை. இதற்கும் இன்னும் சில நாட்கள் தேவை என்றும் அவர் குறிப்பிட்டார்.



புதிய வரையறையின் கீழ் உள்ளூராட்சி சபைகளுக்கு முன்னர் 8 ஆயிரத்துக்கும் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 4 ஆயிரத்து 800 ஆக குறைக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ -சி)

# டொலருக்கு நிகரான ரூபாய் உயர்வு; தேயிலை ஏற்றுமதியாளருக்கு இழப்பு!

கொழும்பு, ஏப். 03

டொலரின் பெறுமதி வீழ்ச்சி மற்றும் ரூபாயின் பெறுமதி உயர்வால் தேயிலை ஏற்றுமதியாளர்கள் சுமார் 14 வீத இழப்பை சந்திக்க நேரிடும் என்று கொழும்பு தேயிலை வர்த்தகர் சங்கத்தின் தலைவர் ஜெயந்த கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

நாட்டில் வழக்கமாக மாதாந்தம் சுமார் இரண்டு கோடி கிலோ தேயிலை ஏற்றுமதி செய்யப்படுகிறது. இரண்டு வார காலப்பகுதியில் டொலரின் பெறுமதி திடீரென வீழ்ச்சியடைந்ததால் ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலைக்கு கிடைத்த வருமானத்தை மாற்றுவதில் இந்த நட்டத்தை எதிர்நோக்க நேரிட்டுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

பல தேயிலை ஏற்றுமதியாளர்கள் மில்லியன் டொலர்களை சம்பாதித்து வருகின்றனர். ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலைக்கான பணத்தைப் பெற 60 தொடக்கம் 120 நாட்கள் வரை ஆகும்.

தேயிலை வியாபாரிகள் ஏல விற்பனையின்போது தேயிலையைப் பெற்று வருகின்றனர். தேயிலையைப் பெறுவதற்கு முன்பு அதனை செலுத்த வேண்டும்.

தேயிலை கொள்முதலுக்கு ரூபாயில் செலுத்த வேண்டியிருப்பதால், தேயிலை ஏற்றுமதி மூலம் பெறப்படும் டொலர்களை ரூபாயாக மாற்ற வேண்டும்.

எனவே, தேயிலை ஏற்றுமதி நிறுவனங்கள் ஏற்றுமதி காலத்தில் பெறுமதியைவிட குறைவான பெறுமதியை பெறுவதனால் பெரும் இழப்பை சந்திக்க நேரிடும் - என்றும் அவர் கூறினார்.

# கடும் நிதிப்பற்றாக்குறையால் தடுமாறும் அம்புலன்ஸ் சேவை!

கொழும்பு, ஏப். 03

நாளொன்றில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட சேவைகளை வழங்கிவரும் 'சுவசரிய' (1990) அம்புலன்ஸ் சேவை நிதிப் பற்றாக்குறையால் தடுமாறுகிறது. எனவே, இந்த சேவையை தொடர்ந்தும் முன்னெடுக்கத் தேவையான உதவிகளை கோருவதற்கு அதன் பணிப்பாளர் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

2018 தொடக்கம் இந்த அத்தியாவசிய சுகாதார சேவைக்கு கருவூலம் 390 கோடி ரூபாயை ஒதுக்கியது.

இது ஓர் இலாப நோக்கற்ற பகுதியளவு அரச நிறுவனத்தால் பராமரிக்கப்படுகிறது. இந்த நிலையில், இந்த சேவைக்கு ஒதுக்கப்பட்ட நிதி 250 கோடி ரூபாயாக குறைக்கப்பட்டது.

இதனால், இந்த அம்புலன்ஸ் சேவையின் 297 வாகனங்கள் 24 மணி நேரமும் சேவையை முன்னெடுப்பது கடினமாகிவிட்டது. இதனால் நிதி பங்காளிப்பாளர்களின் உதவியை பெற வேண்டியுள்ளதாக பணிப்பாளர் சபை தெரிவித்தது.

2016ஆம் ஆண்டு இந்திய நிதி அனுசரணையில் ஆரம்பிக்கப்பட்ட சுவசரிய அம்புலன்ஸ் சேவை இதுவரை 14 இலட்சத்துக்கும் அதிகமான மக்களுக்கு சேவைகளை வழங்கியுள்ளது.

ஒரு அம்புலன்ஸ் சேவையை 24 மணி நேரமும் இயக்குவதற்கு 50 இலட்சம் ரூபாய் வரை ஆண்டுக்கு செலவாவதாக பணிப்பாளர் குழு தெரிவித்துள்ளது.

# ஜனாதிபதியின் வியூகத்தால் கலைந்த எரிபொருள் வரிசை!



கொழும்பு, ஏப். 03

பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினரின் வேலைப் புறக்கணிப்பு பற்றிய தகவல் அறிந்ததும் நாடு முழுவதும் எரிபொருள் வரிசைகள் மீண்டும் உருவாகத் தொடங்கின. நிலைமை சிக்கலாகவே எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகரவை ஜனாதிபதி அழைத்துப் பேசினார்.

இதன்போது காஞ்சன விஜயசேகரவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒரு வியூகத்தை கூறியுள்ளார். அதாவது,"மாத இறுதி வரை நீங்கள் காத்திருக்க வேண்டியதில்லை. நாளைக்குள் எரிபொருட்களின் விலையை உடனே குறைக்க வேண்டும் - என்று கூறியுள்ளார்.

எரிபொருட்களின் விலைகளை கடந்த ஏப்ரல் முதலாம் திகதியே குறைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், அதற்கு முன்னதாகவே -அதாவது கடந்த 26ஆம் திகதியே விலை குறைப்பு தொடர்பாக எரிசக்தி அமைச்சர் தகவலை வெளியிட்டார்.

எரிபொருட்களின் விலை குறைவடைகிறது என்ற தகவல் பரவியதும் மக்கள் எரிபொருளைப் பெற வரிசையில் நிற்பதைத் தவிர்த்து விட்டனர்.



இதற்குள் நிலைமையை சமாளித்து எரிபொருள் விநியோகமும் சீராக்கப்பட்டது. ஜனாதிபதியின் இந்த வியூகத்தால் அரச தரப்புக்கு அதிக நன்மை கிடைத்தது. (ஐ-சி)

# இரகசியமாக சிங்கப்பூருக்கு சென்று திரும்பிய கோட்டாபய!

கொழும்பு, ஏப். 03

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடந்த புதன்கிழமை இரவு சிங்கப்பூர் பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பினார். ஆனால், அவர் சிங்கப்பூர் சென்று வந்தது பலருக்குத் தெரியாது.

ஒரு வாரத்துக்கும் மேலாக கோட்டாபய ராஜபக்ஷ சிங்கப்பூரில் தங்கியிருந்தார். அவர் மவுண்ட் எலிசபெத் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னதாக மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சை தொடர்பான பரிசோதனைகளுக்காகவே கோட்டாபய ராஜபக்ஷ சிங்கப்பூர் சென்றிருந்தார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னதாக ஜனாதிபதி பதவியை துறந்தபோது கோட்டாபய ராஜபக்ஷ சிங்கப்பூரில் தஞ்சம் கோரியிருந்தார். அந்தச் சமயம் அவருக்கு எதிராக அங்கு போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன், இறுதிப் போரின்போது அவர் இழைத்த போர் குற்றங்களுக்காக அவரை கைது செய்ய வேண்டும் என்றும் வழக்கும் தொடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-சி)



# "ஜனாதிபதி தேர்தல் வந்தால் பஸிலே பெரமுன வேட்பாளர்!"

கொழும்பு, ஏப். 03

ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டால் முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவை சிறீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் வேட்பாளராக முன்னிறுத்துவதற்கு அந்தக் கட்சியின் முன்னணி உறுப்பினர்கள் தயாராகி வருகின்றனர் என்று மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் இயக்கம் ஏற்பாடு செய்திருந்த மக்கள் சந்திப்பில் பங்கேற்றபோதே மேற்படி தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக பஸில் ராஜபக்ஷ தனது அமெரிக்க குடியுரிமையை விரைவில் இரத்துச் செய்யத் தயாராக உள்ளார். ஜனாதிபதி வேட்பாளராக பஸில் ராஜபக்ஷ வருவதைத் தடுப்பதற்காக பாராளுமன்றத்தில் உள்ள ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்கள்குழுவை ஈர்க்கும் நடவடிக்கையை ரணில் விக்கிரமசிங்க தற்போது நடைமுறைப்படுத்தியுள்ளார்.

இதன்படி, அமைச்சர் பதவிகள் மற்றும் ஏனைய சிறப்புப் பதவிகளை எதிர்பார்த்து பெருமளவிலான ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தில் இணைந்து கொள்ள தயாராகவுள்ளனர் என்றும் அவர் கூறினார். (ஐ-சி)

# ராஜபக்ஷவை விரட்டிய கிளர்ச்சியின் ஓராண்டு நிறைவு: போராட்டக்காரர்கள் என்ன நினைக்கிறார்கள்?

**ரஞ்சன் அருண் பிரசாத்**

இலங்கை வரலாறு மாற்றியமைக்கப்பட்ட நிகழ்வின் தொடக்க நாளாக இது கருதப்படுகிறது.

சுதந்திர இலங்கை என்றுமே எதிர்கொள்ளாத பாரிய பொருளாதார நெருக்கடியை, 2022ம் ஆண்டு இலங்கை எதிர்கொண்டது.

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி வலுவிழந்தமை, டொலர் கையிருப்பு பாரியளவில் குறைவடைந்தமை உள்ளிட்ட காரணிகளினால் நாட்டில் பொருட்களுக்கான விலை உயர்வு, எரிபொருள், எரிவாயு, பால்மா உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களுக்கான தட்டுப்பாடு, 10 முதல் 14 மணி நேரத்துக்கும் அதிகமான மின்வெட்டு என பல்வேறு பிரச்னைகளை மக்கள் கடந்த ஆண்டு எதிர்கொண்டார்கள்.

ஈஸ்டர் தாக்குதலால் நாடு பாரிய பொருளாதார பின்னடைவை சந்தித்த நிலையில், கொரோனா பெருந்தொற்று இலங்கையைத் தாக்கியது.

இதனால் நாடு முழுவதும் முடங்கி, பொருளாதாரம் ஸ்தம்பித்தது.

இலங்கையின் பிரதான வருவாய் ஆதாரமான சுற்றுலாத்துறை பூஜ்ஜியத்தை நோக்கி தள்ளப்பட்டது. ஏற்றுமதி வருமானம் பாரிய அளவில் பாதிக்கப்பட்டது.

இதனால், இலங்கையின் பிரதான வருமான வழிகள் மூடப்பட்டு, இலங்கை பொருளாதாரம் நெருக்கடியின் உச்சத்தை தொட்டது.

இந்த பொருளாதார நெருக்கடிக்கு ஆட்சி பீடத்தில் இருந்த ராஜபக்ஷ குடும்பமே காரணம் என தெரிவித்து, கடந்த ஆண்டு மார்ச் 31ம் திகதி இரவு போராட்டம் வெடித்தது.

இலங்கை ஜனாதிபதியாக அப்போது இருந்த கோட்டாபய ராஜபக்ஷவின் வீடு அமைந்துள்ள நுகேகொடை - மிரிஹான பகுதியில் ஆயிரக்கணக்கான மக்கள் தன்னிச்சையாக திடீரென ஒன்று கூடி போராட்டத்தை தொடக்கினார்கள்.

**2022 மார்ச் 31ம் திகதி மாலை 6 மணியளவில்...**

மிரிஹான பகுதியிலுள்ள கோட்டாபய ராஜபக்ஷ வீட்டுக்கு செல்லும் வழியை திடீரென நூற்றுக் கணக்கானோர் முடக்கி, கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட ராஜபக்ஷ குடும்பத்திற்கு எதிராக கோஷங்களை எழுப்ப ஆரம்பித்தனர்.

கோட்டாபய ராஜபக்ஷவின் வீட்டிற்கு முன்பாக மக்கள் ஒன்று கூடி போராட்டத்தில் ஈடுபட்டு வருவதாக பிரதான ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களில் செய்தி தீயாக பரவியது.

இந்த செய்தியை கேள்வியுற்ற ஆயிரக்கணக்கான மக்கள் எதிர்பாராத விதத்தில் கோட்டாபய ராஜபக்ஷ வீட்டிற்கு முன்பாக சுமார் 8 மணியளவில் ஒன்று கூடியிருந்தனர்.

வீடுகளில் இருந்தவர்கள், வேலைகளுக்கு சென்று மீண்டும் வீடு திரும்பியவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பெண்கள், வயோதிபர்கள், இளைஞர்கள், யுவதிகள் என அனைவரும் மிரிஹான பகுதியை நோக்கி படையெடுக்க ஆரம்பித்தனர்.

எதிர்பாராத விதத்தில் மக்கள் ஒன்று கூடியதை அவதானித்த பொலிஸார், மக்கள் கூட்டத்தை கட்டுப்படுத்த முடியாத நிலையில், ராணுவம், விசேட அதிரடிப் படை என அனைத்து பாதுகாப்பு பிரிவினரையும் மிரிஹான மற்றும் அதனை அண்மித்த பகுதிகளுக்கு வரவழைத்திருந்தனர்.

அதேபோன்று, ராஜபக்ஷ குடும்பத்தினர் மற்றும் அவர்களுக்கு நெருக்கமானவர்களின் வீடுகளிலும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டது.

கோட்டாபய ராஜபக்ஷவின் வீட்டிற்குள் நுழைவதற்கு மக்கள் முயற்சித்த தருணத்தில், மக்களை கட்டுப்படுத்த முடியாத பொலிஸார் முதலில் நீர்த் தாரை பிரயோகங்களை நடத்தியிருந்தனர்.

நீர்தாரை பிரயோகத்தை எதிர்கொண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள், மீண்டும் கோட்டாபய ராஜபக்ஷ வீட்டிற்குள் செல்ல முயற்சித்த சந்தர்ப்பத்தில் பொலிஸார் கண்ணீர் புகை பிரயோகத்தை நடத்தியிருந்தனர்.

கண்ணீர் புகை பிரயோகம் மற்றும் நீர்தாரை பிரயோகம் ஆகியவற்றுக்கும் கட்டுப்படாத ஆர்ப்பாட்டக்காரர்கள்







மீது, பாதுகாப்பு பிரிவினர் தடியடி பிரயோகம் நடத்த ஆரம்பித்தனர்.

கண்ணீர் புகை பிரயோகம், நீர்தாரை பிரயோகம், தடியடி பிரயோகம் ஆகியவற்றிற்கும் கட்டுப்படாத ஆர்ப்பாட்டக்காரர்களை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்காக பாதுகாப்பு பிரிவினர் துப்பாக்கி பிரயோகமும் நடத்தியிருந்தனர்.

அதேவேளை, கோட்டாபய ராஜபக்ஷவின் வீட்டிற்கு செல்லும் வீதியை மறித்து, பாதுகாப்பு பிரிவின் பேருந்தொன்று நிறுத்தப்பட்டிருந்த நிலையில், அந்த பேருந்தை அடையாளம் தெரியாத சிலர் தீ வைத்து தீக்கிரையாக்கியதுடன், பாதுகாப்பு பிரிவினருக்கு சொந்தமான வாகனங்களையும் தாக்கி, சேதமாக்கியிருந்தனர்.

அதேவேளை, கோட்டாபய ராஜபக்ஷவின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் பாதுகாப்பு பிரிவினர் கொண்டு வந்த வாகனங்கள் பொதுமக்கள் வாகனங்கள்







மீதும் மோதுண்ட நிலையில், பொதுமக்களின் வாகனங்களும் சேதமாகியிருந்ததை அவதானிக்க முடிந்தது.

இந்த நிலையில், நுகேகொடை மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் உடனே அமலுக்குவரும் வகையில் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

பல மணிநேர போராட்டத்திற்கு பின்னர், ஆர்ப்பாட்டம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்ட நிலையில், அடுத்த நாளான ஏப்ரல் முதலாம் தேதி முதல் நாட்டின் பல்வேறு பகுதிகளில் அங்காங்கே போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட போராட்டமானது, 2022ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9ம் தேதி பாரிய தன்னெழுச்சி போராட்டமாக உருவானது.

கொழும்பு காலி முகத்திடலில் ஒன்று கூடிய பல்லாயிரக்கணக்கான மக்கள், கோட்டாபய ராஜபக்ஷ, மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட ராஜபக்ஷ குடும்பத்தினர் மாத்திரமன்றி, அரசாங்கத்தையே பதவி விலகுமாறு வலியுறுத்தி போராட்டத்தை ஆரம்பித்தனர்.

ஆட்சி மாற்றத்தை நோக்கமாக கொண்டு ஆரம்பிக்கப்பட்ட போராட்டம், சுமார் 100 நாட்களை தாண்டி முன்னெடுக்கப்பட்டு, ஜூலை மாதம் 9ம் தேதி வரலாறு காணாத வகையில் லட்சக்கணக்கான மக்கள் கொழும்பு நகரை முற்றுகையிட்டு, ஜனாதிபதியாக பதவி வகித்த





கோட்டாபய ராஜபக்ஷ தப்பிச் செல்லும்படி செய்தனர்.

**போராட்டக்காரர்களின் இன்றைய நிலைப்பாடு என்ன?**

இலங்கையில் ஜனாதிபதி ஒருவரை விரட்டியடிக்கும் அளவுக்கு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஆரம்ப நாளாக 2022ம் ஆண்டு மார்ச் மாதம் 31ம் திகதி அமைந்திருந்தது.

இந்த போராட்டத்தில் களமிறங்கியவர்களின் இன்றைய நிலைப்பாடு என்ன என்பது தொடர்பில், அவர்களை சந்தித்து கலந்துரையாடியபோது:

போராட்டத்தின் முதல் நாள் முதல் இறுதி நாள் வரை, தமிழ் மொழியில் பதாகைகளை ஏந்தி, தமிழ் மொழியில் கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்ட ரஷிகா அருள்செல்வத்தை, சந்தித்து, அவரது நிலைப்பாட்டை கேட்டபோது,

“போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட முதல் நாள் தொடக்கம் நான் அங்கே இருந்தேன். 100 நாட்களும் நான் இருந்தேன். பெரும்பாலும் நாளாந்தம் போராட்டத்திற்கு நான் சென்றேன். நாட்டை நல்லதொரு நாடாக மாற்ற வேண்டும், நல்ல ஆட்சியாளரிடம் நாட்டை ஒப்படைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் நாம் இந்த போராட்டத்தை ஆரம்பித்தோம். அந்த நேரம் நிறைய பிரச்னைகள் நடைபெற்றன. அந்த பிரச்னைகளை மக்களினால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அதை தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதனால், நாங்கள் வெளியில் இறங்கி போராட்டத்தை நடத்தியிருந்தோம்” என அவர் பதிலளித்தார்.

இந்த போராட்டத்தின் நோக்கம் தற்போது நிறைவேறியுள்ளதா என நாம் அவரிடம் கேள்வி எழுப்பினோம்.

‘நாங்கள் எதற்காக போராடினோம். எமது நோக்கம் நிறைவேறியுள்ளதா என கேட்டால், ஆம் என்றும் சொல்ல முடியாது, இல்லை என்றும் சொல்ல முடியாது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டு நாடு சற்று முன்னோக்கி வந்துள்ளதாக நான் எண்ணுகின்றேன். இப்போது நாட்டை ஆட்சி செய்பவர் சரியானவர் அல்லது அவர் சரி வரமாட்டார் என நான் கூறவில்லை. ஆனால், நாடு யாரிடம் இருந்து விலகி சற்றேனும் முன்னேறி வர வேண்டும் என்று நினைத்தோமோ, அவரிடம் இருந்து விடுபட்டு வந்துள்ளது என்றே நினைக்கின்றேன்.

கஷ்டப்படும் மக்களுக்கு தேவையானவற்றை, ஆட்சியாளர்கள் மக்களுடன் இருந்து செய்ய வேண்டும் என்பதே எனது நோக்கம். முதலில் இருந்த பிரச்னைகள் இப்போது கொஞ்சம் குறைந்துள்ளன என நான் நினைக்கின்றேன். அதனால், இப்போது உள்ளவருக்கு ஒரு வாய்ப்பை கொடுத்து பார்ப்போம் என்பதே என்னுடைய நிலைப்பாடு” என ரஷிகா அருள்செல்வம் தெரிவித்தார்.

**விமானத்திற்குள் கைதான சமூக செயற்பாட்டாளர் கருத்து என்ன?**

போராட்டத்தில் முன்னின்று போராடி, விமானத்திற்குள் வைத்து பாதுகாப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்ட சமூக செயற்பாட்டாளர் டானிஸ் அலியையும், தொடர்புக்கொண்டு, அவரது இன்றைய நிலைப்பாட்டை கேட்டறிந்தோம்.

‘போராட்டத்தில் நாம் எதிர்பார்த்த வெற்றியை நாம் பெற்றுக்கொண்டோம். அடுத்த போராட்டம் ஒரு ரேடிகல் மாற்றம். ஒரு போராட்டத்தில் எல்லா விடயங்களும் ஒரே இரவில் நடந்து விடும் என எதிர்பார்க்க முடியாது. ஆனாலும், ஒரு மாற்றத்தை நாங்கள் உருவாக்கினோம். மாற்றம் ஒன்றுதான் விடிவு. அந்த மாற்றத்தை நாங்கள்

(09ஆம் பக்கம் பார்க்க)

# ஆபாச பட நடிகையுடனான தொடர்பை மறைக்க பணம் கொடுத்த குற்றச்சாட்டு!
# டிரம்ப் கைது செய்யப்படுவாரா?




ஆபாசப்பட நடிகை தொடர்பான விவகாரத்தில் அமெரிக்காவின் முன்னாள் அதிபரான டொனால்ட் டிரம்ப் மீது கிரிமினல் குற்றச்சாட்டு பதிவு செய்யப்படுகிறது. ஆபாசப் பட நடிகையான ஸ்டோர்மி டேனியல்ஸூக்கு பணம் கொடுத்ததாக டிரம்ப் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அமெரிக்காவை சேர்ந்த ஆபாசப்பட நடிகை ஸ்டார்மி டேனியல்சுடன் டிரம்ப் தொடர்பில் இருந்தார் என்பது அவர் மீதான குற்றச்சாட்டு. 2016ஆம் ஆண்டு அமெரிக்க அதிபர் தேர்தலில் போட்டியிட்ட டிரம்ப், அந்த குற்றச்சாட்டுகளை முற்றிலுமாக மறுத்தார்.

ஆனால், நடிகையுடனான தனது தொடர்பை மறைக்க தனது முன்னாள் வழக்கறிஞர் மைக்கேல் கோஹன் மூலமாக டிரம்ப் 130,000 டொலர் பணம் கொடுத்தார் என்பது குற்றச்சாட்டு. மைக்கேல் கோஹனுக்கு அந்த பணத்தை டிரம்ப் எவ்வாறு கொடுத்தார் என்பதும் தற்போது விசாரணைக்கு உள்ளாகியிருக்கிறது.

டொனால்ட் டிரம்ப் மீது மான்ஹாட்டன் கிராண்ட் ஜூரி கிரிமினல் குற்றச்சாட்டை சுமத்துவதற்கு வாக்களித்துள்ளது. அதாவது அவர் மீது எழுத்துப்பூர்வமான குற்றச்சாட்டைப் பதிவு செய்வதற்கு இது வழிவகுக்கும். இதனால் அவர் கைதாகும் சூழல் எழுந்துள்ளது. இருப்பினும் கைதாவதைத் தவிர்க்க டிரம்ப் தாமாகவே சரணடையலாம் என்றும் கூறப்படுகிறது. அடுத்த வாரம் சரணடைவார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவில் இதற்கு முன்பு பதவியில் இருக்கும் அல்லது முன்னாள் அதிபர்கள் யாரும் கிரிமினல் குற்றச்சாட்டை எதிர்கொண்டது இல்லை. அந்த வகையில் டிரம்ப் தான் முதல் நபர்.

**டிரம்ப் தரப்பு கூறுவது என்ன?**

டிரம்பின் வழக்கறிஞர் ஜோ டகோபினா, முன்னாள் அதிபர் ட்ரம்பால் 'அரசியல் துன்புறுத்தல்" என்று அழைப்படுவதின் ஒரு பகுதியாக இந்தக் குற்றச்சாட்டு உள்ளது என்று கூறுகிறார்.

டொனால்ட் ட்ரம்பை தவிர வேறு யாராவது இருந்தால் அவர் மீது இந்தக் குற்றச்சாட்டுகள் கூறப்பட்டிருக்காது என்று சிபிஎஸ் ஊடகத்திடம் டகோபினா கூறியுள்ளார்.

டொனால்ட் ட்ரம்பிடம் இருந்து மாறுபட்ட அரசியல் கருத்துகளைக் கொண்ட ஒரு வழக்கறிஞர் மூலம் இந்த வழக்கு தொடுக்கப்பட்டுள்ளதால் இது மிகவும் சிக்கலான வழக்கு என்றும் இந்த வழக்கைப் பொறுத்தவரை குற்றம் என்று எதுவும் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

'தன் மீதான குற்றச்சாட்டுகள் குறித்து டிரம்ப் கவலைப்படவில்லை. ஆனால், அவர் வருத்தமாகவும் கோபமாகவும் இருக்கிறார். அவர் அரசியல்ரீதியாக துன்புறுத்தப்படுகிறார் என்பது பலருக்கும் தெளிவாகத் தெரிகிறது," என்றும் அவர் குறிப்பிட்டார்.

**ஜோ பைடன் கருத்து என்ன?**

வெள்ளை மாளிகையில் கூடியிருந்த நிருபர்கள் அதிபர் ஜோ பைடனிடம் டொனால்ட் டிரம்ப் விவகாரம் குறித்து கேள்வி எழுப்பினர்.

அதற்கு அவர், 'டிரம்ப் தொடர்பாக என்னிடம் எந்தக் கருத்தும் இல்லை" என்று பதிலளித்துச் சென்றார்.

2016ஆம் ஆண்டில், ஆபாசப் பட நடிகையான ஸ்டோர்மி டேனியல்ஸ் சில ஊடகங்களைத் தொடர்புகொண்டு, 2006ஆம் ஆண்டில் ட்ரம்புடன் தனக்கு திருமண பந்தத்தைக் கடந்த தொடர்பு இருந்ததாகக் கூற முன்வந்தார்.

ஆனால், ட்ரம்பின் வழக்கறிஞர் மிச்செல் கோஹென் இந்த விவகாரம் தொடர்பாக வெளியே கூறாமல் இருக்க ஸ்டோர்மி டேனியல்ஸூக்கு அவர் பணம் கொடுத்தார் என்று குற்றச்சாட்டு . இந்த விவகாரம் சட்டத்திற்குப் புறம்பானது அல்ல. ஆனால், மைக்கேல் கோஹனுக்கு டிரம்ப் அளித்த பணம் 'வழக்கறிஞர் கட்டணம்' என்று ஆவணங்கள் கூறுகின்றன.

மேலும் இது ட்ரம்பின் பொய்யான வணிகப் பதிவுகளுக்குச் சமம் என்று வழக்கறிஞர்கள் கூறுகின்றனர், இது சிறிய குற்றமாகவே பார்க்கப்படுகிறது. ஆனால் அவர் மற்றொரு குற்றத்திற்கான கருவியாக இருந்தது நிரூபிக்கப்பட்டால் அது கிரிமினல் குற்றமாக மாறும்.

இது தேர்தல் நடத்தை விதிகளை மீறியது என்றும் வழக்கறிஞர்கள் வாதிடலாம். ஏனென்றால், டேனியல்ஸூக்கு அவர் பணத்தை கொடுத்ததாகக் கூறப்படுவது மற்றொரு பெண்ணுடன் தனக்கு தொடர்பு இருக்கிறது என்பதை வாக்காளர்கள் தெரிந்துகொள்ளக்கூடாது என்பதற்காக அவர் மேற்கொண்ட முயற்சியாகக் கருதப்படும்.

டிரம்ப் மீதான பதவி நீக்கத்தை ஆதரிப்பவர்கள் கூட இது ஒரு தெளிவான வழக்கு அல்ல என்பதை ஒப்புக்கொள்கிறார்கள்.

**டிரம்ப் கைதாகிறாரா?**

டிரம்ப் மீதான குற்றச்சாட்டு தொடர்பான விவரங்கள் வெளியிடப்படவில்லை. விசாரணையை மேற்கொண்டு வரும் மான்ஹாட்டன் மாவட்ட வழக்கறிஞர் ஆல்வின் ப்ராக் அலுவலகம், குறிப்பிடப்படாத குற்றச்சாட்டுகளில், டிரம்ப்பின் சரணடைதல் தொடர்பாக அவரது வழக்கறிஞரைத் தொடர்புகொண்டதாக உறுதிப்படுத்தியுள்ளது. ப்லோரிடாவில் உள்ள டிரம்ப் திங்களன்று நியூயார்க் சென்று செவ்வாயன்று நீதிமன்றத்தில் ஆஜராவார் என்று இந்த சம்பவம் குறித்து நன்கு அறிந்தவர்கள் குறிப்பிட்டதாக சிபிஎஸ் நியூஸ் குறிப்பிட்டுள்ளது.

இந்த விவகாரத்தில் டிரம்ப் ஒத்துழைப்பை வழங்குவார் என்று அவரது வழக்கறிஞர்கள் குறிப்பிட்டுள்ளதால், அவருக்கு எதிராக கைது வாரன்ட் பிறப்பிக்கப்படாது.

**விசாரணை எப்போது?**

டிரம்ப் மீதான குற்றச்சாட்டு தொடர்பான விசாரணை அடுத்த வாரம் செவ்வாயன்று நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்போதுதான் அவருக்கு எதிரான குற்றச்சாட்டு முதன்முதலாக நீதிமன்றத்தில் வாசிக்கப்படும். இதைத் தொடர்ந்து டிரம்ப் குற்றம் செய்தாரா இல்லையா என்று கேட்கப்படும்.

நீதிபதி அனுமதிக்கும் பட்சத்தில் விசாரணை நடைபெறும் பகுதிகளில் கேமராக்கள் இடம்பெறலாம். விசாரணைக்குப் பின்னர் அவர் சொந்த ஜாமீனில் விடுவிக்கப்படலாம்.

**அதிபர் தேர்தலில் போட்டியிடலாமா?**

தற்போதைய குற்றச்சாட்டுகள் மட்டுமல்ல, தண்டனையே விதிக்கப்பட்டாலும், அதிபர் தேர்தலுக்கான பிரசாரத்தை அவர் தொடர்வதைத் தடுக்க முடியாது.

என்ன நடந்தாலும், தான் பின் வாங்கப் போவதில்ல என்பதற்கான சமிக்ஞைகளை ட்ரம்பே கொடுத்துள்ளார். எனவே, அவர் தொடர்ந்து பிரசாரத்தை முன்னெடுத்துச் செல்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உண்மையில், அமெரிக்க சட்டத்தில் குற்றம் சாட்டப்பட்ட ஒரு வேட்பாளரை பிரசாரம் செய்வதில் இருந்தும், அதிபராகப் பணியாற்றுவதில் இருந்தும், ஏன் கைதாவதில் இருந்தும் கூட தடுக்க முடியாது.

எனினும், டிரம்ப் கைது செய்யப்பட்டால், அதிபர் தேர்தலுக்கான அவரது பிரசாரத்தில் அது சிக்கலை ஏற்படுத்தும். மேலும், அமெரிக்க அரசியல் அமைப்பிற்குள் ஏற்கெனவே உள்ள அப்பட்டமான பிளவுகளை இது ஆழமாக்கும்.

# ராஜபக்ஷவை விரட்டிய கிளர்ச்சியின்...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்போது கொண்டு வந்துள்ளோம். மற்ற மாற்றங்களுக்கான பயணங்கள் ஆரம்பித்துள்ளன.

"இந்த ரேடிகல் மாற்றத்திற்குள் 13, 13 பிளஸ் எல்லாமே இருக்கிறது. இதனை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க எம்முடன் இணைந்துள்ளார். ஒவ்வொருவர் தொடர்பிலும் எமக்கு ஒவ்வொரு விதமான கருத்துக்கள் இருக்கின்றன. கருத்துக்களை ஓரத்தில் வைத்து விட்டு, பிரிவினைகளை ஓரத்தில் வைத்து விட்டு, ஒன்று சேர வேண்டிய இடத்தில் ஒன்று சேர்ந்து, வேலைகளை செய்துகொண்டிருக்கின்றோம். மக்கள் ஒன்றிணைந்தே போராட்டத்தை முன்னோக்கி கொண்டு செல்ல முடியும். போராட்டம் தொடரும். வித்தியாசமான முறையில் போராட்டம் தொடரும்" என டானிஸ் அலி தெரிவிக்கிறார்.

உங்களின் கோரிக்கைகளுக்கு அமைய, என்னென்ன மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன, என்னென்ன மாற்றங்களை எதிர்பார்க்கிறீர்கள் என நாம் அவரிடம் கேள்வி எழுப்பினோம்.

"கோட்டா, ரணில் போக வேண்டும் என காலிமுகத்திடலில் சொன்னோம். புதிய அரசியலமைப்பொன்று கொண்டு வரவேண்டும். இடைக்கால அரசாங்கமொன்று நடக்க வேண்டும். ஒரு வருடத்திற்கு பின்னர் நாடாளுமன்ற தேர்தல் ஒன்று நடக்க வேண்டும் என கேட்டோம். அது ஒன்றும் நடக்கவில்லை. கோட்டா மட்டும்தான் போனார். 13க்கு அப்பாற் சென்ற சட்டத்தை பற்றி நாங்கள் பேசுகின்றோம். ஆனால் குறைந்தது 13 சரி வர வேண்டும். நீண்ட நாட்களாக மக்கள் கஷ்டப்பட்டார்கள். ஒவ்வொரு காலப் பகுதியிலும் ஒவ்வொரு விதமான பிரச்னைகளை எதிர்கொண்டார்கள். குறைந்தது 13 கிடைத்து, மாற்றத்திற்கான ஆரம்பமாக இருக்க வேண்டும். எனினும், நாங்கள் கேட்பது நாளைக்கே நடக்குமா என்பது கேள்விக் குறியாக இருக்கின்றது.

வடக்கு கிழக்கு பகுதிகள் அரசியலமைப்பு ரீதியாக பிரிக்கப் பட்டாவிட்டாலும், அரசியல் ரீதியாகவும் மொழி ரீதியாகவும் பிரிந்துதான் இருக்கின்றோம். பிரிவினையை இன்னும் பிரிவினையாக உருவாக்காமல், அவர்களுக்கு சுயமாக இயங்குவதற்கான அமைப்பொன்றை செய்து கொடுத்தால், பிரச்னை இல்லாமல் சந்தோசமாக ஒன்றாக வாழ முடியும். ரணில் போக வேண்டும் என்பது குறிக்கோளாக இருக்கிறது. ரணில் சரி வராது. கை, காலை பிடித்து, ஐ.எம்.எப் உதவியை பெற்றுக்கொண்டுள்ளார்கள். 13 பிளஸ் தேவை. ஏன்றாலும் இப்போது குறைந்தது 13வது தர வேண்டும் என்பதே எமது கோரிக்கை" என அவர் பதிலளித்தார்.

ரணில் விக்ரமசிங்கவை தமது ஜனாதிபதி என்று ஒரு போதும் ஏற்றுக்கொள்ளப் போவதும் இல்லை, தமது ஜனாதிபதி என்று கூறப் போவதும் இல்லை என டானிஸ் அலி கூறுகின்றார்.

தலைவர் திருடனாக இருந்தாலும், திருட முடியாத மாற்றத்தை ஏற்படுத்துவதே தமது கொள்கை எனவும் டானிஸ் அலி தெரிவிக்கிறார்.

**போராடி சிறை சென்ற இஸ்மத் மௌலவி என்ன சொல்கிறார்?**

இதேவேளை, தான் ஒருபோதும் ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதியாக ஏற்றுக்கொள்ளவில்லை என போராட்டத்தில் ஈடுபட்டு, சிறைச்சாலை சென்ற சமூக செயற்பாட்டாளர் இஸ்மத் மௌலவி தெரிவிக்கின்றார்.

'நாட்டிற்காக, நாட்டு மக்களுக்காக போராட்டம் என்று வரும் போது, அதற்கு நானும் ஒரு சொந்தக்காரன். ஆனால் நாங்கள் போராட்டம் செய்து, ஒரு வருடம் ஆகிறது. ஆனால் இதில் பல பல சந்தேகங்கள் இப்போது வருகின்றன. எங்களோடு தமிழ் பேசக்கூடிய, சிங்கள மொழி பேசக்கூடிய அருட்தந்தையர்கள் இருந்தார்கள். இவர்கள் எல்லோரும் கடைசி வரை எங்களோடு இருந்தார்கள். ஆனால் எப்போது ரணில் வந்தாரோ, அன்றிலிருந்து ஒருவரும் வீதியில் இறங்கிப் போராடுவதில்லை. ஒருவரின் பேச்சும் இல்லை. இதில் எனக்கொரு சந்தேகம் வருகிறது. அடுத்தது எல்லோருக்கும் தெரியும், சஹ்ரான் குண்டு வைத்தது. ஆனால் சஹ்ரானை வழிநடத்தியது யார்? அந்த தலைவரை இன்னும் பிடிக்கவில்லை. இது ஒரு சந்தேகமாக இருக்கிறது.

போராட்டத்தில் பங்கு பற்றிய ஒவ்வொருவரும் தலைவர்கள்தான். கோட்டாபய ராஜபக்ஷவை விரட்டியதன் பின்னர், நல்லவொருவரை தலைவராக எடுக்க வேண்டும். நாட்டிற்கு நல்லதொரு ஜனாதிபதி வர வேண்டும் என்று எண்ணினோம். ஆனால் வரவில்லை. நாடாளுமன்றத்திற்குள் இருந்த ராஜபக்ஷ குடும்பம், இவரை ஜனாதிபதியாக தெரிவு செய்தது. ஐ.எம்.எப் ஆக இருக்கட்டும், வீதி முழுவதும் தங்கமாக இருக்கட்டும். அதில் வேலையில்லை. மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒருவர் வர வேண்டும்.

இது ஜனநாயக நாடு. நாங்கள் முன்வைத்த ஒரு கோரிக்கையும் இன்னும் நிறைவேறவில்லை. அவர்களின் கோரிக்கை மாத்திரமே நிறைவேறியுள்ளது. இன்னும் ராஜபக்ஷதான். நான் ரணிலை ஜனாதிபதியாக ஏற்றுக் கொள்ளவில்லை. வாக்கெடுப்பில் வரவேண்டும். இன்று வரை ஒரு கோரிக்கையும் நிறைவேற்றப்படவில்லை" என போராட்டத்தில் ஈடுபட்ட இஸ்மத் மௌலவி தெரிவிக்கிறார். (பிபிசி)



# கரும்புலியை தேடிச்சென்ற சஜித்!

கொழும்பு, ஏப். 03

ஐக்கிய மக்கள் சக்தியின் தலை வரான சஜித் பிரேமதாஸ கரும்புலியை தேடிச் சென்றார் என்று அறிய வருகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரான சஜித் பிரமேதாஸவின் தந்தையாரும் மறைந்த முன்னாள் ஜனாதிபதியுமான ரணசிங்க பிரேமதாஸவின் 30ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அம்பாந்தோட்டையில் சிறப்பு நிகழ்வு ஒன்று நடைபெற்றது.

சஜித் பிரேமதாஸ அங்கு தங்கியிருந்தபோது, யால காட்டில் முதன்முறையாக கரும்புலி ஒன்று காணப்பட்ட செய்தியை ஊடகங்கள் வெளியிட்டன. இதைப் பார்த்த அவர், அரிய கரும்புலியை பார்வையிடுவதற்கு தீர்மானித்தார்.

பொதுவாக, சஜித் காடு மற்றும் வனவிலங்குகளை நேசிக்கும் அரசியல்வாதியாகக் கருதப்படுகின்றார். சஜித்துக்கு விடுமுறை கிடைத்தால் யால காட்டுக்குச் சென்று காட்டு விலங்குகளை படம் எடுப்பது ஒரு பொழுதுபோக்கு. அந்த வகையில், அம்பாந்தோட்டையில் இருந்து கொழும்பு திரும்பும் வழியில் யால பகுதிக்கு சென்ற சஜித், இந்த கரும்புலியை பார்வையிடுவதற்காக சுமார் 2 மணித்தியாலங்கள் காத்திருந்த போதும் சஜித்துக்கு கரும்புலியை பார்வையிடும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

இதனையடுத்து, கரும்புலியை பார்வையிடுவதை வேறொரு நாளுக்கு ஒத்தி வைத்த சஜித், அங்கு ஏற்கனவே தயாரிக்கப்பட்டிருந்த ஐக்கிய மக்கள் சக்தியின் பொரு ளாதாரத் திட்டத்தின் தொடக்க விழாவில் பங்கேற்பதற்காக காலிக்கு புறப்பட்டுச் சென்றார் என்று அறியவருகிறது.

(ஐ)

# புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் தமிழ் தரப்புடன் விரைவில் பேச்சு!

## அமைச்சர் சுசில் பிரேமஜயந்த

கொழும்பு, ஏப். 03

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் தமிழ் அரசியல் தலைமைகளுடன் விரிவான பேச்சில் ஈடுபடுவோம். பயங்கரவாத தடைச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு புதிய சட்டத்தின் ஊடாக நியாயம் பெற்றுக் கொடுக்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என்று பாராளுமன்ற முதல்வரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் வினவிய போது மேற்கண்ட வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது,



வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் மூன்றாவது வாரத்தில் இடம்பெறும் பாராளுமன்ற அமர்வின் போது சபைக்கு நீதியமைச்சரால் சமர்ப்பிக்கப்படும். நாளை செவ்வாய்க் கிழமை காலை 09.30 மணிக்க கூடவுள்ளது.

அன்றைய தினம் 1979 ஆம் ஆண்டு 40ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை மற்றும்,1969 ஆம் ஆண்டின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட வர்த்தமானி ஒழுங்கு விதிகள் மீதான விவாதம் இடம்பெறவுள்ளது.

ஏப்ரல் மாதத்துக்கான மூன்றாவது வார பாராளுமன்ற அமர்வு எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை பாராளுமன்றத்தை கூட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆகவே, வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் இக்காலப்பகுதியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் மாறுப்பட்ட கருத்துகள் குறிப்பிடப்படுகின்றன. ஜனநாயகம், மனித உரிமைகள் ஆகியவற்றுக்கு எதிரான எவ்வித விடயங்களும் குறித்த சட்டமூல வரைபில் உள்ளடக்கவில்லை. அவ்வாறு ஏதும் காணப்படுமாயின் நாட்டு மக்கள் எவரும் உயர்நீதிமன்றத்தை நாடலாம்.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு தடைச் சட்டம் தொடர்பில் தமிழ் தலைமைகளுடன் விரிவான பேச்சில் ஈடுபடுவோம். பயங்கரவாத தடைச்சட்டத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த புதிய சட்டத்தின் ஊடாக நியாயம் பெற்றுக்கொடுக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

ஊழல் ஒழிப்புச் சட்டமூலம் இம்மாத காலத்துக்குள் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும். அத்துடன், உத்தேச புதிய மத்திய வங்கி சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் அறிவிப்பு வெளியான பிறகு அடுத்தக்கட்ட நடவடிக்கை பாராளுமன்றத்தால் முன்னெடுக்கப்படும் - என்றார்.

(ஐ)








## தரம் 01இற்கான செயல்பாட்டு மைய வாய்மொழி ஆங்கில ஆரம்ப நிகழ்வு

அம்பாறை, ஏப். 03

தேசிய ரீதியிலான தரம் 1 மாணவர்களுக்கான செயல்பாட்டு ரீதியான வாய்மொழி ஆங்கிலம் அங்குரார்ப்பண நிகழ்வு நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயத்தில் கடந்த வியாழக்கிழமை அதிபர் திருமதி நிலந்தினி ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சம்மாந்துறை வலய உதவிக் கல்விப் பணிப்பாளரும் பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளருமான வி.ரி.சகாதேவராஜா கலந்து சிறப்பித்தார்.

மாணவர்களுக்கான நவீன வகுப்பறையில் மாணவர்களுக்கு செயற்பாட்டு அடிப்படையிலான ஆங்கில பாடம் கற்பித்தல் ஸ்மார்ட் ரி.வி மூலம் ஆங்கில ஆசிரியை திருமதி எஸ்.ஹரிப்பிரியாவால் நடத்தப்பட்டது.(அ)

## ரிஷாத் பதியுதீனுக்கு கௌரவிப்பு



அக்கரைப்பற்று, ஏப். 03

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் றிஷாத் பதியுதீன் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் பிரதி தேசிய அமைப்பாளரும், நிந்தவூர் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளருமான எம்.ஏ.எம். அஷ்ரப் தாஹிர் ஆகியோர் நிந்தவூரில் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வு நிந்தவூர் மக்கள் காங்கிரஸ் செயற்குழுவின் ஏற்பாட்டில் நிந்தவூர் அழகாபுரி விடுதியில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் அமைச்சருமான அப்துல்லாஹ் மஹ்ரூப், சம்மாந்துறை பிரதேச சபை முன்னாள் தவிசாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான ஐ.எல்.எம்.மாஹிர், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் உயர்பீட உறுப்பினரும் முன்னாள் அட்டாளைச்சேனை பிரதேச சபை தவிசாளருமான சட்டத்தரணி எம்.ஏ.அன்சில், நிந்தவூர் பிரதேச சபை உறுப்பினர்கள், முன்னாள் உறுப்பினர்கள், கட்சியின் நிந்தவூர் மத்திய குழு உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற தேர்தல் வேட்பாளர்கள் மற்றும் கட்சியின் ஆதரவாளர்களென பலரும் கலந்து கொண்டனர்.

(அ)

## கல்முனையில் அரசின் நலத் திட்ட உதவிகள்

அம்பாறை, ஏப். 03

அரசின் நலன் திட்ட உதவிகள் பெறுபவர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்மொழியப்பட்ட இலவச அரிசி வழங்கும் திட்டத்தின் கீழ், கல்முனை பிரதேச செயலக பிரிவிக்குட்பட்ட 16 கிராம சேவகர் பிரிவு பிரிவுகளிலும் உள்ள மக்களுக்கு அரிசி வழங்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலியின் தலைமையில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

சமுர்த்தி தலைமைப் பீட முகாமையாளர் ஏ.ஆர்.எம். சாலிஹ் வழிகாட்டலில் இடம் பெற்ற இந்நிகழ்வில், சமுர்த்தி வங்கியின் முகாமையாளர் எம். புவிராஜ், உதவி முகாமையாளர் ஐ.எல். அருஸூதீன் மற்றும் கட்டுப்பாட்டு சபை தலைவர், பிரதேச அமைப்பு தலைவர், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண் டனர்.

4741 சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்களுக்கு 20 கிலோ அரிசி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

(அ)

# மலசலகூடக் குழியில் வீழ்ந்த இரண்டு வயதுக் குழந்தை பலி!

### அக்கரைப்பற்று நாவற்காட்டில் பரிதாபம்

அக்கரைப்பற்று, ஏப். 03

**இரண்டரை வயது ஆண் பிள்ளையொன்று மலசல கூட குழியில் வீழ்ந்து பரிதாபகரமாக உயிரிழந்துள்ள சோக சம்பமொன்று அம்பாறை - அக்கரைப்பற்று நாவற்காடு பிரதேசத்தில் நேற்று முன் தினம் மாலை பதிவாகியுள்ளது.**

உயிரிழந்த பிள்ளையின் தந்தை வெளிநாடொன்றில் தொழில் புரிந்துவரும் நிலையில் இரு பிள்ளைகளின் தாயும் உயிரிழந்த பிள்ளையும் அயலில் உள்ள உறவினர் வீடொன்று வழமை போன்று சென்றுள்ளனர்.

அங்கு அப்பிள்ளையின் தாயார் உறவினர்களுடன் இணைந்து சிறு வேலையில் ஈடுபட்டிருந்த நிலையில் யாரும் அவதானிக்காத சந்தர்ப்பத்தில் பிள்ளை வெளியே சென்றுள்ளது.

வெளியேறிய பிள்ளை அருகில் இருந்த வீடொன்றில் பாதுகாப்பற்ற முறையில் நிர்மாணிக்கப்பட்ட மலசலகூட குழியில் வீழ்ந்துள்ளது.

சில நிமிடங்களில் பிள்ளையைக் காணாத தாயும் உறவினர்களும் தேடியபோது மலசலகூட குழியில் இருந்து பிள்ளையை எடுத்து வைத்தியசாலையில் அனுமதித்தபோதும் அது உயிரிழந்துள்ளது.

இச்சம்பவம் அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு பிரதேசத்தில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

(அ)

## கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முதலாவது புவியியல் பேராசிரியராக இராஜேந்திரம்

மட்டக்களப்பு, ஏப். 03

கிழக்குப்பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்தின் புவியியல் துறையின் முதலாவது புவியியற் பேராசிரியராக கலாநிதி க.இராஜேந்திரம் பதவியுயர்வு பெற்றுள்ளார்.

கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வ. கனகசிங்கம் தலைமையில் கடந்த வாரம் கூடிய கிழக்குப் பல்கலைக்கழக பேரவை இதற்கான அனுமதியினை வழங்கியுள்ளது. இது தொடர்பான உத்தியோகபூர்வ கடிதம் கடந்த 30 ஆம் திகதி துணைவேந்தரால் கையளிக்கப்பட்டுள்ளது.

கலாநிதி க.இராஜேந்திரம் மட்டக்களப்பு தேற்றாத்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தனது பாடசாலைக் கல்வியை தேற்றாத்தீவு சிவகலை வித்தியாலயம், தேற்றாத்தீவு மகா வித்தியாலயம், மற்றும் பட்டிருப்பு தேசியபாடசாலை ஆகியவற்



றில் பயின்றுள்ளார். பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் புவியியல் துறையில் சிறப்புக் கற்கையினை மேற்கொண்டு முதன்மை தேர்ச்சி பெற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புவியியல் துறையில் விரிவுரையாளராக பணிபுரிந்துள்ளார். தனது முதுதத்துவமாணிப் பட்டத்தைப் யாழ் பல்கலைக்கழகத்தில் பெற்றுக் கொண்ட இவர், தனது கலாநிதிப் பட்டத்தினைப் இந்தியாவின் புதுடில்லியிலுள்ள புகழ்பெற்ற ஜவகர்லால்நேரு பல்கலைக்கழகத்தில் பெற்றுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முதுநிலை விரிவுரையாளராக (தரம் 1) பதினேழு வருடங்கள் பணியாற்றிய இவர் 2008ஆம் ஆண்டு கிழக்குப் பல்கலைக்கழகத்தில் முதுநிலை விரிவுரையாளராக (தரம் 1) இணைந்து கொண்டார்.

கிழக்குப் பல்கலைக்கழக புவியியல் துறையில் கலைமாணி, முதுமாணி, முதுதத்துவமாணி, கலாநிதிக் கற்கைகளுக்கான விரிவுரையாளராகவும், வழிகாட்டியாகவும், பரீட்சகராகவும் பணியாற்றி வந்துள்ளதுடன் இலங்கை, இந்திய பல்கலைக் கழகங்களின் கலாநிதி, முதுதத்துவமாணி ஆய்வுகளுக்கான பரீட்சகராகவும் பணிபுரிந்து வருகின்றார்.

(அ)

## நிலக்கடலைச் செய்கைக்காக 28 பேருக்கு ரூ.13 லட்சம் கடன்

அம்பாறை, ஏப். 03

கஞ்சிகுடியாறு கிராமிய பெண்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துமுகமாக நிலக்கடலை செய்கைக்காக 28பேருக்கு தலா 45ஆயிரம் ரூபாய் வீதம் 13 லட்சம் ரூபாய் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரனின் வேண்டுகோளுக்கமைவாக கனடிய நாட்டில் உள்ள சர்வதேச ஐக்கிய மகளிர் அமைப்பின் நிதி உதவியின் கீழ் லங்கா விசன் அக்ஸன் பவுண்டேசன் அமைப்பினரால் கஞ்சிகுடியாறு கிராமிய பெண்கள் நலன்புரி அங்கத்துவர்கள் 28 பேருக்கு இவ் உதவி வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் திருக்கோவில் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் கந்தவனம் சதிசேகரன், பிரதேச செயலக சமுர்த்தி தலைமையக முகாமையாளர் கே.பரமானந்தம் மற்றும் கிராம சேவை



நிர்வாக உத்தியோகத்தர் ஏ.கந்தசாமி மற்றும் லங்கா விசன் அக்ஸன் பவுண்டேசன் முகாமையாளர் எஸ். யுவன் மற்றும் அதன் இணைப்பாளர் மற்றும் கஞ்சிகுடியாறு கிராம சேவை உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பயனாளிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(அ)

## கல்முனையில் ஒருவர் கஞ்சாவுடன் சிக்கினார்

அம்பாறை, ஏப். 03

கல்முனையில் ஒரு கிலோ கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்முனை விஷேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலையடுத்து கடந்த வெள்ளியன்று மாலை கல்முனை சாஹிராக்கல்லூரி வீதியில் வைத்து மோட்டார் சைக்கிளில் தொடர்ச்சியாக கஞ்சா விற்பனையில் ஈடுபட்டு வந்த நபர் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரிடமிருந்து ஒரு கிலோ கஞ்சாவும் மோட்டார் சைக்கிளும் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டது. சந்தேகநபர் 46 வயதுடையவர்.

இவர் பற்றிய மேலதிக விசாரணைகளை சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.எம்.சம்சுதீன் தலைமையிலான குழுவினர் மேற்கொண்டுள்ளனர்.

(அ)

# கர்ப்பவதி, சிறுவர்களைக்கூட தூக்கிலிடுகின்றது வடகொரியா!

பியோங்யாங், ஏப். 03

**வடகொரியா மனிதாபிமானமற்ற முறையில் சிறுவர்களையும் கர்ப்பவதி பெண்களையும் தூக்கிலிடுகிறது என்று தென்கொரியா குற்றம் சாட்டியுள்ளது.**

இதுகுறித்து தென்கொரிய ஒருங்கிணைப்பு அமைச்சகம் தரப்பில், “ஆறு மாத கர்ப்பவதி பெண்ணை வட கொரியா தூககிலிட்டுள்ளது. உடல் வளர்ச்சி குறைந்த பெண்களை இனம் கண்டு அவர்களின் கர்ப்ப பையை நீக்கவும் வடகொரியா உத்தர விட்டிருக்கிறது. மேலும், தன்பாலின ஈர்ப்பாளர்களையும், பிற மதங்களை வழிப்பட்டவர்களையும் வடகொரியா தூக்கிலிட்டுள்ளது” என்று குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

மேலும், வடகொரியாவின் தூக்குத் தண்டனை பட்டியலில் சிறுவர்களும் இருந்தனர் என்று தென்கொரியா தெரிவித்துள்ளது.

இந்தநிலையில், 2017 முதல் 2022 வரை, வடகொரியாவில் நடந்த கொடூரமான மனித உரிமைகள் மீறல் குறித்து, நாட்டிலிருந்து தப்பி ஓடிய 500இற்கும் மேற்பட்ட வடகொரியர்களிடம் இருந்து சாட்சியம் சேகரிக்கப்பட்டுள்ளதாகவும் ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.


பின்னணி

வடகொரியா தனது உள்நாட்டு விடயங்கள் அனைத்தையுமே இராணுவ இரகசியம் போல் பாதுகாக்கிறது. அங்கு என்ன நடக்கிறது என்ற உண்மை நிலையை உலக நாடுகள் அவ்வளவு எளிதில் அறிந்துகொள்ள முடியாது. ஊடகங்களும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் தான் இயங்குகின்றன.

மேலும், உள்நாட்டிலேயே அணு ஆயுதங்களை உற்பத்தி செய்வதற்கு முன்னுரிமை கொடுக்கத் தொடங்கியது வடகொரியா. நீண்டகாலமாக பொருளாதார தடையை எதிர்கொண்ட நாடாக இருக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# 7 ஆண்டுகளில் மனிதர்கள் சாகா வரம் பெறுவார்கள்!



நியூயோர்க், ஏப். 03

இன்னும் 7 ஆண்டுகளில் நானோ ரோபோ உதவியுடன் மனிதர்கள் சாகா வரம் பெறுவர் என கூகுள் நிறுவன முன்னாள் விஞ்ஞானி ரே குர்ஸ்வேல் கூறியுள்ளார்.

கூகுள் நிறுவனத்தின் முன்னாள் விஞ்ஞானி ரே குர்ஸ்வேல். கணினி பொறியியலாளரான இவர், இதுவரை 147 முன் கணிப்புகளை கூறியுள்ளார். இவற்றில் 86 சதவீதம் சரியாக இருந்துள்ளது. 2000ஆம் ஆண்டுக்குள் சதுரங்கப் போட்டியில் மனிதர்களை, கணினி வெல்லும் என இவர் கடந்த 1990ஆம் ஆண்டே கூறினார். அது சரியாக இருந்தது. அதேபோல் இணைய வளர்ச்சி, தந்தியில்லா தொழில்நுட்ப மாற்றம் அதிகளவில் இருக்கும் என இவர் கூறிய முன் கணிப்புகளும் மிகச்சரியாக இருந்தன.

இவரை தற்போது விளாகர் அடாஜியோ என்பவர் நேர்காணல் செய்து யூ-ரியூப்பில் காணொலியாக வெளியிட்டுள்ளார். அதில் ரே குர்ஸ்வேல் கூறியிருப்பதாவது:

கடந்த 2005ஆம் ஆண்டில் வெளிவந்த ஹதி சிங்குலாரிட்டி இஸ் நியர்’ என்ற புத்தகத்தில் 2030ஆம் ஆண்டுக்குள் மனிதர்கள் நிரந்தர வாழ்க்கையை அனுபவிக்க தொழில்நுட்பம் அனுமதிக்கும் என கூறியிருந்தேன்.

தற்போது மரபியல், ரோபோடிக்ஸ், மற்றும் நானோ தொழில்நுட்பத்தில் முன்னேற்றங்கள் மற்றும் விரிவாக்கங்கள் ஏற்பட்டுள்ளன. விரைவில் நரம்புகள் வழியாக செலுத்தப்படும் ‘நானோ போட்ஸ்’ எனப்படும் மிக நுண்ணிய ரோபோக்கள் வரப்போகின்றன. இவை 50 முதல் 100 நானோ மீற்றர் அகலம்தான் இருக்கும். தற்போது மரபணு ஆய்வு, செல் இமேஜிங் பொருட்கள் போன்றவற்றில் நானோபோட்கள் பயன்படுத்தப்படுகின்றன.

முதுமை, உடல்நல பாதிப்பில் இருந்து மனிதர்களை காக்கவும், உடலில் உள்ள செல்களை பழுது பார்க்கவும் நானோ ரோபோ உதவும். இதன்மூலம் மனிதர்கள் தாங்கள் விரும்பியதை எவ்வளவு வேண்டுமானாலும் சாப்பிட்டு ஒல்லியாகவும் தெம்புடனும் இருக்கலாம். நாம் கூடுதலாக சாப்பிட்டாலும், அதை வெளியேற்றும் வேலையை நானோபோட் செய்யும் என 2003இல் எனது கட்டுரையில் தெரிவித்துள்ளேன் - என்று கூறியுள்ளார். (ஐ)

# கல்லூரி மாணவர்கள் காதலிக்க சீனாவில் ஒரு வாரம் விடுமுறை!

பீஜிங், ஏப். 03

கொரோனா பெருந்தொற்றின் பின்னர் சீனாவில் இறப்பு வீதம் உயர்ந்து பிறப்பு வீதம் சடுதியாக குறைந்துள்ளது. 141 கோடி சனத்தொகை கொண்ட அந்த நாட்டில், கடந்த ஆண்டு பிறப்பு விகிதம் ஆயிரம் பேருக்கு 7.52 என்ற அளவில் இருந்தது. இது நடப்பு ஆண்டில் 6.77 என்ற அளவில் குறைந்துள்ளது.

ஏற்கனவே, சடுதியாக குறைந்த பிறப்பு வீதத்தை அதிகரிக்க 2015 ஆம் ஆண்டு முதல் சீனா பல முயற்சிகளை எடுத்துள்ளது. இதற்காக ஒரு குழந்தை திட்டத்தை இரத்து செய்து 3 பிள்ளைகள் வரை பெற்றுக் கொள்ள அனுமதித்தது. ஆனால், பலன் கிட்டவில்லை.

இதையடுத்து, திருமணம் ஆகாதவர்கள்கூட குழந்தை பெற்று கொள்வதற்கு சிச்சுவான் மாகாண அரசு அனுமதி அளித்தது. இதன்பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கையாக, பல்கலைக்கழக மாணவர்களிடம் விந்தணு தானம் செய்ய முன் வருமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இதிலும் எதிர்பார்த்த வெற்றி கிட்டவில்லை.



இந்த நிலையில், சீனாவில் உள்ள 9 கல்வி மையங்களை சேர்ந்த கல்லூரி மாணவர்களுக்கு நடப்பு ஏப்ரலில் இருந்து முதல் வாரத்தில் காதல் செய்ய விடு முறை அளிக்கும் திட்டத்தை அரசாங்கம் அறிமுகப் படுத்தியுள்ளது.

இதன்படி, ஏப்ரல் 1ஆம் திகதி முதல் 7ஆம் திகதி வரை மாணவ, மாணவியர்களுக்கு விடுப்பு வழங்கப்பட்டு, அவர்கள் இயற்கையை காதலிப்பதற்கும், வாழ்க்கையை காதலிப்பதற்கும் மற்றும் விடுமுறையை அனுபவித்து காதலை கொண்டாடவும் கல்வி நிறுவனங்கள் ஊக்கப்படுத்தியுள்ளன.

(ஐ)



# 8336 மீற்றர் ஆழத்தில் மீனினம் கண்டறிவு!

ரோக்கியோ, ஏப். 03

கடலில் அசாதாரணமான - 8 ஆயிரத்து 336 மீற்றர் - 27 ஆயிரத்து 349 அடி ஆழத்தில் மீன்கள் நீந்துவதை ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இந்த இனம் சூடோலிபாரிஸ் வகையை சேர்ந்தது. நத்தை மீன் வகையாகும்.

ஜப்பானின் தெற்கே உள்ள இசு ஒகசவாரா ஆழியில் இந்த மீன்கள் படம்பிடிக்கப்பட்டுள்ளன.

இதுவரை 8 ஆயிரத்து 178 மீற்றர் ஆழத்தில் உலகின் மிக ஆழமான மரியான ஆழியில் காணப்பட்ட மீன்களே இதுவரை ஆழத்தில் கண்டறியப்பட்ட உயிரினமாக இருந்தது. ஆனால், அதைவிட 158 மீற்றர் அதிக ஆழத்தில் இப்போது மீன்கள் கண்டறியப்பட்டுள்ளன.

நத்தை மீன் இனங்களில் 300 இற்கும் மேற்பட்ட வகைகள் உள்ளன. இந்த மீன்கள் கடலின் ஆழத்தில் வாழும் வகையில் உடலமைப்பை கொண்டுள்ளன. மிதப்பை கட்டுப்படுத்தும் வகையில் உள்ள இந்த மீனினத்தில் சிறுநீர்ப்பை இல்லை. இது ஆழத்தில் வசிக்க இந்த மீனினத்துக்கு கூடுதல் நன்மையாக உள்ளது. உறிஞ்சி உண்ணும் உணவு முறையை கொண்ட இந்த மீனினம் சிறிய மீன்களை உட்கொள்கின்றன என்றும் ஆய்வில் தெரிய வந்துள்ளது.

(ஐ)



4 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அழிந்து போன மம்மத் யானைகளின் மரபணுவை பயன்படுத்தி நெதர்லாந்தின் ஆம்ஸ்டர்டாம் ஆய்வு நிலையத்தால் தயாரிக்கப்பட்ட இறைச்சி உருண்டை (meatball) இது. உணவு உற்பத்திக்கு சாத்தியமான செயற்கை முறை இறைச்சி வளர்ப்பை ஊக்குவிக்கும்வகையில் இந்த இறைச்சி உருண்டை தயாரிக்கப்பட்டுள்ளது.

# “ட்ரம்பை ஆடையின்றி கண்டவள் நான் அவரைக் கண்டு அஞ்சப்போவதில்லை!”

வாஷிங்டன், ஏப். 03

‘‘டொனால்ட் ட்ரம்பை பார்த்து எனக்கு பயமில்லை. அவரை நிர்வாணமாக பார்த்தவள் நான். எனவே அவர் ஆடையுடன் வந்து என்னை பயமுறுத்த முடியாது - என்று கூறியிருக்கிறார் ஆபாசப்பட நடிகையான ஸ்டோர்மி டேனியல்ஸ்.

பிரிட்டனின் தி ரைம்ஸ் நாளிதழுக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதியான டொனால்ட் ட்ரம்ப் ஒரு தொழிலதிபர் ஆவார். இவர் மீது ஏற்கனவே பல பெண்கள் பாலியல் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளனர். அத்துடன், அதற்கான ஆதாரங்களையும் வெளியிட்டிருந்தனர்.

இதனிடையே ஆபாச பட நடிகை பிரபலம் ஸ்டோர்மி டேனியல்ஸ் ட்ரம்ப்புடனான உறவு குறித்து அவர் வெளியிட்ட புத்தகத்தில் பதிவு செய்திருந்தார். இந்த குற்றச்சாட்டை ட்ரம்ப் திட்டவட்டமாக மறுத்தாலும், கடந்த 2016ஆம் ஆண்டு, ஜனாதிபதி தேர்தல் சமயத்தில், இந்த குற்றச்சாட்டு வெளியாகியிருந்தால், அதன் தாக்கம் தேர்தலில் அதிகம் எதிரொலித்தது.

இதையடுத்து, ஸ்டோர்மி டேனியல்ஸை தொடர்ந்து பேச விடாமல் இருக்க ஒரு இலட்சத்து 30 ஆயிரம் அமெரிக்க டொலர்களை ட்ரம்ப் வழங்கினார் என்ற குற்றச்சாட்டு எழுந்தது. வரி மற்றும் வங்கி மோசடி உள்ளிட்ட கூட்டாட்சி பிரசார நிதிச் சட்டங்களை மீறியதற்காக ஆட்சி மாறியதும் ட்ரம்ப் மீது குற்றவியல் வழக்கு தொடரப்பட்டது.

இந்த நிலையிலேயே ஸ்டோர்மி டேனியல்ஸ் அளித்த பேட்டியில்,

டொனால்ட் ட்ரம்பை பார்த்து எனக்கு பயமில்லை. அவரை நிர்வாணமாக பார்த்தவள் நான். எனவே அவர் ஆடையுடன் வந்து என்னை பயமுறுத்த முடியாது. டொனால்ட் ட்ரம்ப் ஏற்கனவே ஒரு கலவரத்தைத் தூண்டிவிட்டு, மரணத்தையும் அழிவையும் ஏற்படுத்தியவர். அவர் தற்போது கைது செய்யப்பட்டாலும் அல்லது விளைவு எதுவாக இருந்தாலும், அது வன்முறையை ஏற்படுத்தப் போகிறது - என்று கூறியுள்ளார். (ஐ)

# நியூசிலாந்துடனான இருபது - 20 சுப்பர் ஓவரில் இலங்கை வெற்றி!

ஒக்லாந்து, ஏப். 03

சுப்பர் ஓவரில் தீக்ஷனவின் சிறப்பான பந்துவீச்சு நியூசிலாந்தை 8 ஓட்டங்களுக்கு கட்டுப்படுத்த, அசலங்கவின் சிறப்பான அதிரடியான சிக்ஸர் இலங்கை அணிக்கு இலகுவான வெற்றியைப் பெற்றுத் தந்துள்ளது.

நியூசிலாந்து சென்றுள்ள இலங்கை அணி டெஸ்ட், ஒருநாள் தொடர்களில் தோல்வியை தழுவியுள்ளது. இந்த நிலையில் இரு அணிகளிடையேயான இருபது - 20 தொடர் நேற்று ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்து முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணியில் ஒரு வருடத்துக்கு பிறகு இருபது - 20 போட்டிக்கு குசல் பெரேரா உள்வாங்கப்பட்டிருந்தார்.

சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய அவர் 45 பந்துகளில் 4 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 53 ஓட்டங்களை குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தார். இது குசல் பெரேராவின் 13ஆவது அரைச்சதமாக இருந்தது. இதன் மூலம் அவர் திலகரட்ண டில்ஷானின் சாதனையை சமன் செய்தார்.

ஐந்தாவது வீரராகக் களமிறங்கிய சரித் அசலங்க அதிரடியாக ஆடினார். அவர் 41 பந்துகளில் 6 சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகளை விளாசி 67 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார்.

ஏனைய வீரர்களில் குசல் மெண்டிஸ் 25, வனிந்து ஹசரங்க ஆட்டமிழக்காமல் 21 ஓட்டங்களை குவித்தனர்.

இதன்மூலம் 20 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 196 ஓட்டங்களைப் பெற்றது இலங்கை அணி.

நியூசிலாந்தின் பந்துவீச்சில் ஜேம்ஸ் நீசம் 2 விக்கெட்களையும், அடம் மில்ன், லிஸ்ரர், ஷிப்லி ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணிக்கு இலங்கையின் பந்துவீச்சு அச்சுறுத்தலாக அமைந்தது. பௌவ்ஸ் 2, ரிம் செய்பேர்ட்0 என தொடக்க வீரர்கள் வீழ்ந்தனர்.

எனினும் பின்னர் வந்த டரில் மிற்செல் 44 பந்துகளில் 3 சிக்ஸர்கள், 5 பௌண்ட்ரிகளுடன் 66 ஓட்டங்களைப் பெற்றார். மார்க் சப்மன் 33, ரவீந்திர 26, ரொம் லதாம் 27 ஓட்டங்களைப் பெற்றனர்.

20 ஓவர்களி நிறைவில் நியூசிலாந்து 8 விக்கெட்கள் இழப்புக்கு 196 ஓட்டங்களைப் பெற்றது.

இலங்கையின் பந்துவீச்சில் தசுன் சானக, வனிந்து ஹசரங்க, மதுசன் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் தீக்ஷன, மதுசங்க ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

சமநிலையை தவிர்க்க சுப்பர் ஓவர் வழங்கப்பட்டது. அதை தீக்ஷன வீசினார். துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து முதல் பந்தில் ஓர் ஓட்டம் எடுத்தது. இரண்டாவது பந்து அகலப்பந்தாக மாற ஓர் உதிரி ஓட்டம் கிடைத்தது. பதிலுக்கு வீசப்பட்ட பந்தில் நீசம் ஆட்டமிழந்தார். நான்காவது பந்தில் இரு ஓட்டங்களும் 5 ஆவது பந்தில் 4 ஓட்டங்களும் பெறப்பட்டன. இறுதிப் பந்தில் சப்மன் ஆட்டமிழந்தார்.



சுப்பர் ஓவர் முடிவில் நியூசிலாந்து 2 விக்கெட்களை இழந்து 8 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு ஆடிய இலங்கைக்கு குசல் மெண்டிஸ், அசலங்க துடுப்பெடுத்தாடினர். மில்ன் அந்த ஓவரை வீசினார்.

முதல் பந்தில் ஓர் ஓட்டம் பெறப்பட்டது. இரண்டாவது பந்தில் அசலங்க சிக்ஸர் விளாசினார். மூன்றாவது பந்தில் பௌண்ட்ரி அடித்தார். அந்தப் பந்து முறையற்ற பந்தாகவும் அமைந்ததால் இலங்கை 12 ஓட்டங்களைப் பெற்று இலகு வெற்றி பெற்றது. (ஐ)

# 50 ஓட்டங்களால் லக்னோவிடம் வீழ்ந்தது டில்லி கப்பிட்டல்ஸ்



லக்னோ, ஏப். 03

டில்லி கப்பிட்டல்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் அணி 50 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றுள்ளது.

நடப்பு ஐ. பி. எல். தொடரின் மூன்றாவது லீக் ஆட் டத்தில் லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ், டில்லி கப்பிட் டல்ஸ் அணிகள் நேற்று மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற டில்லி அணி களத்தடுப் பைத் தேர்வு செய்தது. இதன்படி, முதலில் துடுப்பெடுத் தாடிய லக்னோ அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட்டுக்கு 193 ஓட்டங்கள் குவித்தது.

தொடக்க வீரர் கைல் மேயர்ஸ் அதிரடியாக ஆடி 38 பந்துகளில் 2 பௌண்ட்ரி, 7 சிக்சர்களுடன் 72 ஓட்டங்கள் விளாசினார். நிக்கலஸ் பூரண் 36 ஓட்டங்கள் எடுத்து கைகொடுத்தார்.

டில்லி அணி சார்பில் கலீல் அகமது, சேட்டன் சகாரியா தலா 2 விக்கெட் கைப்பற்றினர். அக்சர் பட்டேல், குல்தீப் யாதவ் ஆகியோர் தலா ஒரு விக்கெட் எடுத்தனர்.

தொடர்ந்து 194 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய டில்லி கப்பிட்டல்ஸ் அணியின் தலைவரும் தொடக்க ஆட்டக்காரருமான டேவிட் வோர்னர் பொறுப்புடன் ஆடி அரைச்சத மடித்தார். அவர் 56 ஓட் டங்களில் ஆட்டமிழந் தார்.

ரூசோவ் 30 ஓட்டங் களில் ஆட்டமிழக்க, மற்ற வீரர்கள் நிலைத்து நிற்க வில்லை. கடைசி கட் டத்தில் அக்சர் படேல் 16 ஓட்டங்கள் எடுத்தார். லக்னோ அணி சார்பில் மார்க் வூட் சிறப்பாக பந்துவீசி 5 விக்கெட் வீழ்த்தி அசத்தினார்.

ஆவேஷ் கான், ரவி பிஷ்னோய் ஆகியோர் தலா 2 விக்கெட்கள் வீழ்த்தினர்.

இறுதியில், டில்லி அணி 143 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து தோற்றது. இதன்மூலம் 50 ஓட்டங்கள் வித்தியாசத்தில் லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் அணி நடப்பு தொடரில் முதல் வெற்றியை ருசித்தது. (ஐ)

# மியாமி ரென்னிஸ் தொடர் சம்பியன் கிவிடோவா வசம்!


மியாமி, ஏப். 03

மியாமி ஓப்பன் ரென்னிஸ் தொடரின் சம்பியன் பட்டத்தை பெட்ரா கிவிடோவா கைப்பற்றியுள்ளார். புகழ்பெற்ற மியாமி ஓப்பன் சர்வதேச ரென்னிஸ் தொடர் அமெரிக்காவில் நடந்தது.

இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நேற்று நடைபெற்ற இறுதி போட்டியில் கஜகஸ்தான் வீராங்கனை எலினா ரைபகினா, செக் குடியரசு வீராங்கனை பெட்ரா கிவிடோவாவுடன் மோதினார்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த போட்டியில் கிவிடோவா 7-6 (16-14), 6-2 என்ற செற் கணக்கில் ரைபகினாவை வீழ்த்தி வெற்றி பெற்றார்.

இதன் வெற்றியின் மூலம் முதல் முறையாக கிவிடோவா மியாமி ஓப்பன் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார். (ஐ)





# டக்வேர்த் முறையில் பஞ்சாப் கிங்ஸ் வெற்றி!

பஞ்சாப், ஏப். 03

கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் மழை குறுக்கிட்டதால் டக்வேர்த் - லூயிஸ் முறைப்படி 7 ஓட்டங்களால் பஞ்சாப் கிங்ஸ் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

நடப்பு ஐ. பி. எல். தொடரில் இரண்டாவது லீக் ஆட்டத்தில் பஞ்சாப் கிங்ஸ் மற்றும் கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணிகள் மோதின. இதில், நாணயச்சுழற்சியில் வென்ற கொல்கத்தா அணி பந்துவீச்சைத் தெரிவு செய்தது.

இதன்படி பஞ்சாப் அணிக்கு பிரப்சிம் ரன் சிங் - ஷிகர் தவான் இணை தொடக்கம் கொடுத்தது. பிரப்சிம் ரன்சிங் 2 சிக்ஸர், 2 பௌண்ட்ரி என அதிரடி ஆட்டத்தில் இறங்கினாலும் 2ஆவது ஓவரிலேயே ஆட்டமிழந்து நடையைக் கட்டினார். பானுக ராஜபக்ஷ, ஷிகர் தவான் இணைப்பாட்டத்தை ஏற்படுத்தி கொல்கத்தாவின் பந்துகளை பறக்க விட்டனர். இருவரின் அதிரடியால் பஞ்சாப் அணி 10 ஓவர் முடிவில் ஒரு விக்கெட்டை இழந்து 100 ஓட்டங் களைச் சேர்த்தது.

32 பந்துகளில் 50 ஓட்டங்களைச் சேர்த்த பானுக ராஜபக்ஷவை உமேஷ் யாதவ் விக்கெட்டாக்கினார். அடுத்து வந்த ஜிதேஷ் சர்மா 2 சிக்ஸர்களை விளாசி 21 ஓட்டங்களை தன் பங்குக்கு சேர்த்துவிட்டு கிளம்பினார். அணிக்கு நம்பிக்கையளிப்பார் என எதிர்பார்த்த தவான் (40ஓட்டங்கள்) வருண் சக்கரவர்த்தியால் ஆட்டமிழந்து பெவிலியன் திரும்பினார். தொடக்கத்தில் அதிரடி காட்டிய பஞ்சாப் அணி விக்கெட் இழப்பால் தடுமாறி 15 ஓவர் முடிவில் 4 விக்கெட்களை இழந்து 143 ஓட்டங்களை சேர்த்தது.

அடுத்து வந்த சிக்கந்தர் ரசா (16) பெரிதாக சோபிக்கவில்லை. சாம் கரன் இறுதி ஓவரில் சிக்ஸர் விளாசி அணியின் ஓட்டத்தை உயர்த்தினார். 20 ஓவர் முடிவில் பஞ்சாப் அணி 5 விக்கெட்களை இழந்து 191 ஓட்டங்களைச் சேர்த்தது. சாம் கரன் 26 ஓட்டங்களுடனும், ஷாருக்கான் 11 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். கொல்கத்தா அணி தரப்பில் ரிம் சவுதி அதிகபட்சமாக 2 விக்கெட்களையும், உமேஷ் யாதவ், வருண் சக்கரவர்த்தி, சுனில் நரேன் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதையடுத்து, கொல்கத்தா அணியின் தொடக்க ஆட்டக்கார ரான மந்தீப் சிங் 2 ஓட்டங்களில் வெளியேறினார். அவரைத் தொடர்ந்து வந்த அனுகுல் ராய் 4 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். 2 ஓவரில் 2 விக்கெட் என தள்ளாடிய கொல்கத்தாவுக்கு நம்பிக்கையளித்த ரஹ்மானுல்லா குர்பாஸ் 22 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

வெங்கடேஷ் ஐயர் நிலைக்க, அவருடன் இணைப்பாட்டம் அமைத்த நிதிஷ் ராணா 24 ஓட்டங்களில் பெவிலியன் திரும்பினார். ரின்கு சிங் 4 ஓட்டங்களில் விக்கெட்டாக, 11 ஓவர்களில் 5 விக்கெட்டை இழந்து 83 ஓட்டங்களுடன் மந்தமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது கொல்கத்தா.

2 சிக்ஸர், 3 பௌண்ட்ரிகளை விளாசிய அண்ட்ரே ரஸல் 35 ஓட்டங்களுடன் சாம்கரன் பந்துவீச்சில் வீழ்ந்தார். நிலைத்து ஆடுவார் என நம்பிய வெங்கடேஷ் ஐயர் 34 ஓட்டங்களில் பெவிலியன் திரும்பும் போது அணியின் நிலைமை மோசமானது.

16 ஓவர் முடிவில் 7 விக்கெட்டை இழந்து 146 ஓட்டங்களை சேர்த்திருந்தது கொல்கத்தா. வெற்றிக்கு 24 பந்துகளில் 46 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் மழை குறுக்கிட்டதால் ஆட்டம் பாதிக்கப்பட்டு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. பின்னர் டக்வேர்த் லூயிஸ் விதிப்படி 7 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பஞ்சாப் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

பஞ்சாப் அணி தரப்பில் அர்ஷ்தீப் சிங் 3 விக்கெட்களையும், சாம் கரன், நதன் எலீஸ், சிகந்தர் ரசா, ராகுல் சாஹர் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். (ஐ)

# குடிமக்களையும் பயங்கரவாதிகளாக சித்தரிப்பதற்கே அரசாங்கம் முயற்சி!

## லக்ஷ்மன் கிரியெல்ல குற்றச்சாட்டு



கொழும்பு, ஏப்ரல் 03

**உத்தேச புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தின் மூலம், சகல குடிமக்களையும் பயங்கரவாதிகளாக சித்தரிப்பதற்கே அரசாங்கம் முயற்சிக்கின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.**

**கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.**

**அவர் மேலும் தெரிவிக்கையில் - உத்தேச புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை அரசாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளது.**

நாட்டில் தற்போது பயங்கரவாத செயற்பாடுகள் எதுவும் இல்லை.

எனவே அரசாங்கமானது பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் திருத்தங்களை கொண்டுவரும் என்றே எதிர்பார்த்தோம்.

நாட்டு மக்கள் சாதாரண வாழ்க்கையை வழக்கூடிய வகையில் தற்போது இருக்கும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை அரசாங்கமானது திருத்தம் செய்யும் என்றே நாம் எதிர்பார்த்தோம்.

ஜனநாயக ரீதியான திருத்தங்களையே எதிர்பார்த்தோம்.

சிவில் சமூகம் கோரிய திருத்தங்களையே எதிர்பார்த்தோம்.

எனினும் அரசாங்கம் கொண்டுவரவுள்ள உத்தேச புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் என்பது, மக்களை நெருக்கடிக்குள் தள்ளும் சட்டமூலமாகவே காணப்படுகின்றது.

சகல குடிமக்களையும் பயங்கரவாதிகளாக சித்தரிக்கும் தன்மை இந்த சட்டமூலத்தில் காணப்படுகின்றது.

அமைதியான முறையில் போராட்டத்தை முன்னெடுப்பதற்கு இந்த சட்டமூலம் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

தொழிற்சங்க நடவடிககைகளுக்கு இந்த சட்டமூலம் தடைவிதிக்கின்றது.

சிவில் சமூக செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கும் இந்த சட்டமூலம் தடைவிதிக்கப்படுகின்றது.

மாணவர்கள் அதேபோன்று ஊடக நிறுவனங்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

எனவே இவ்வாறு சமூகத்தின் சகல பிரிவுகளையும் ஒடுக்கும் செயற்பாடுகளையே இந்த சட்டமூலம் முன்னெடுக்கவுள்ளது.

நாட்டில் பயங்கரவாதம் ஒன்று இல்லை. எனினும், இந்த அரசாங்கமானது நாட்டை வங்குரோத்து அடைய செய்ததன் பின்னர், நாட்டில் அமைதியின்மை என்பது சகல பகுதிகளிலும் அதிகரித்துள்ளது.

மக்களுக்கு வாழக்கூடிய சூழல் நாட்டில் இல்லை.

மூன்று வேளைகளும் உணவு உட்கொள்ளக்கூடிய வழிவகைகள் நாட்டில் இல்லை.

எனவே அதிகரித்துவரும் நெருக்கடிகளால் மக்கள் வீதிக்கு இறங்குவதைத் தடுப்பதற்காகவே, உத்தேச புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை அரசாங்கம் கொண்டுவர முயற்சிக்கின்றது-என்றார்.

(அ)

# அரச சொத்துக்களை விற்பதிலேயே அரசு அதிக கவனம் செலுத்துகின்றது

## கூறுகின்றார் சம்பிக்க ரணவக்க



கொழும்பு, ஏப். 03

சர்வதேச நாணய நிதியத்தினால் முன்வைக்கப்பட்ட மிக முக்கியமான முன்மொழிவுகளைத் தவிர்த்து, அரச சொத்துக்களை விற்பனை செய்வதில் மாத்திரமே அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க குற்றம் சாட்டியுள்ளார்.

அரச நிறுவனங்களை தனியாரிடம் ஒப்படைக்கவேண்டும் என்றால் அதற்கு வலுவான பொறிமுறை அவசியம் என வலியுறுத்திய அவர், சில சுயாதீன அதிகாரிகளுடனும் அவை தொடர்பாக கலந்துரையாட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் திட்டம் குறித்து மக்களுக்கு தெளிவுபடுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பு என்றும், தொழிற்சங்கங்கள் உட்பட அனைத்து தரப்பினருடனும் அரசாங்கம் கலந்துரையாடல்களை மேற்கொள்ளவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

மூடப்பட்ட, ஒருங்கிணைக்கப்பட்ட, தனியார்மயமாக்கப்பட்ட மற்றும் அரச உடைமையின் கீழ் தொடரவேண்டிய அரசாங்கத்தின் முயற்சிகள் அனைத்தும் கணக்காய்வு அலுவலகத்தினால் முகாமைத்துவம் செய்யப்படவேண்டும் என்றும் சம்பிக்க ரணவக்க கூறினார்.

(அ)

# பெண் சட்டத்தரணிகளின் உடையில் மாற்றம் வரும்!

கொழும்பு, ஏப். 03

பெண் நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகள் எதிர்காலத்தில் நீதிமன்றத்திற்கு பாவாடை மற்றும் பிளவுஸ் அல்லது கால் சட்டை அணிந்து செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.

உயர் நீதிமன்ற விதிகளில் திருத்தம் செய்யப்பட்டு இந்த வாரம் வெளியிடப்பட்ட வர்த்தமானியில் புதிய ஆடைக்குறியீட்டு விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, ஒரு வெள்ளை ரவிக்கை மற்றும் கருப்பு கோட் மற்றும் காலணிகள் கொண்ட கருப்பு கால்சட்டை அல்லது வெள்ளை ரவிக்கை மற்றும் கருப்பு கோட் மற்றும் காலணிகள் கொண்ட ஒரு கருப்பு பாவாடை அணியலாம்.

இதுவரை வெள்ளை, கருப்பு, சாம்பல் அல்லது மெல்லிய ஊதா நிறங்களில் சேலை மற்றும் ஜக்கெட் மட்டுமே அனுமதிக்கப்பட்டிருந்தது. புதிய ஆடையின் படி, கால்சட்டையின் நீளம் கணுக்கால் வரை நீளமாக இருக்க வேண்டும், அதே நேரத்தில் பாவாடையின் நீளம் முழங்காலுக்கு கீழே இருக்க வேண்டும். சட்டை அல்லது ரவிக்கை உயர் கழுத்து மற்றும் நீண்ட கை இருக்க வேண்டும்.

ஆண் நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகளுக்கான ஆடைக் குறியீடு மாறாமல் உள்ளது.

(அ)

# இ.போ.சவுக்கு ஆட்சேர்ப்பு விரைவில்

கொழும்பு, ஏப். 03

சுமார் 800 சாரதிகள், 275 நடத்துநர்களை இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

அதற்கான ஆட்சேர்ப்பு விரை வில் மேற்கொள்ளப்படும் என அதன் தலைவர் லலித் டி அல்விஸ் தெரிவித்தார்.

இலங்கை போக்குவரத்து சபையில் 1,035 சாரதி வெற்றிடங்கள் உள்ளன.

மேலும், 450 நடத்துனர்கள் பற்றாக்குறை இருப்பதாக லலித் டி அல்விஸ் குறிப்பிட்டார்.

புதிய ஆட்சேர்ப்பு மூலம் வெற்றிடங்களின் எண்ணிக்கை குறையும் என இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் தெரிவித்தார்.

(அ)

# வங்கிக் கணக்குகளுக்குள் ஊடுருவிப் பணம் திருடிய சீன பிரஜைகள் இலங்கையில் கைது

கொழும்பு, ஏப். 03

ஒன்லைன் நிதி மோசடி தொடர்பில் 39 சீன பிரஜைகள் அளுத்கம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் பல்வேறு நாடுகளில் உள்ளவர்களின் கணக்குகளில் இருந்து பல மாதங்களாக இலட்சக்கணக்கான பணத்தை இணையத்தின் ஊடாக மோசடி செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அளுத்கம, களுவாமோதர பிரதேசத்தில் உள்ள சுற்றுலா விடுதி ஒன்றில் குறித்த குழுவினர் தங்கியிருந்ததாகவும், பல தூதரகங்கள் ஊடாக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சீனப் பிரஜைகள் அளுத்கம பொலிஸூக்கு அழைத்துச் செல்லப்பட்ட நிலையில், அவர்களிடம் இருந்த பல ஸ்மார்ட் போன்கள் மற்றும் பணமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

(அ)

# புதையல் தோண்டிய மூவர் கைது

கொழும்பு, ஏப்ரல் 03

மாத்தளை ரத்தொட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டு இருந்த மூவரை பொலிஸார் நேற்று முன்தினம் கைதுசெய்துள்ளனர்.

மெனிக்ஹின்ன பிரதேசத்தைச் சேர்ந்த 33, 35 மற்றும் 40 வயதுகளையுடைய மூவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே குறித்த மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கடுமையான குற்றவாளிகளிலிருந்து சிறு குற்றவாளிகளை பிரிக்க திட்டம்

கொழும்பு, ஏப். 03

சிறிய குற்றங்களுக்காக சிறையில் இருக்கும் கைதிகளை பாரிய குற்றவாளிகளுடன் கலப்பதை தடுக்கும் வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற வைபவம் ஒன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர், இந்த விடயம் குறித்து குழுவொன்று ஆராய்ந்து வருவதாக குறிப்பிட்டார்.

(அ)

## புதிய...

வழக்கை விசாரித்த உயர்நீதிமன்ற நீதிபதி, சட்டமா அதிபர் மற்றும் நீதி அமைச்சர் ஆகியோரின் எழுத்துமூல பரிந்துரைகளை பெற்றே அதற்கான விடுதலையை நிறைவேற்ற ஜனாதிபதிக்கு அரசமைப்புக்கு அதிகாரம் உள்ளது.

ஆனால், புதிய திருத்தத்தின்படி, மரண தண்டனை விதிக்கப்பட்டவருக்கு மன்னிப்பு வழங்கும்போது வழக்கை விசாரித்த நீதிபதியிடம் ,ருந்து அறிக்கை பெற வேண்டும் என்ற விதி நீக்கப்படும்.

மாறாக, சட்டமா அதிபர் மற்றும் நீதி அமைச்சரின் பரிந்துரையின்பேரில் மட்டுமே மரண தண்டனையை மன்னிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்க கிட்டும்.

ஆரம்பத்தில் வழக்கை விசாரித்த நீதிபதிகள் காலதாமதத்துக்குப் பிறகு அவர்களைக் கண்டுபிடிப்பதில் உள்ள சிரமம் காரணமாக புதிய திருத்தம் கொண்டு வரப்படுவதாக நீதி அமைச்சர் எழுத்து மூலம் அமைச்சரவைக்கு அறிவித்துள்ளார். (ஐ)

## வடக்கு...

மிகக் கவனமாகப் பணியாற்ற வேண்டும் எனக் கூறியுள்ளார். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களிடமிருந்து கூடுதலான கண்காணிப்பு நடவடிக்கைகளையும் எதிர்பார்ப்பதாக ஆளுநர் மேலும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் உடன் அமுலுக்கு வரும் வகையில் பின்வரும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சபை வருமானங்கள் குறித்து சபை செயலாளர்களுக்கு இலக்குகள் வழங்கப்பட்டு அவர்களின் வருடாந்த செயலாற்றுகை மதிப்பிடலில் உள்வாங்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகங்களின் ஆய்வு உத்தியோகத்தர்கள் சபைகளின் செலவினங்கள் தொடர்பான கண்காணிப்புக்காகவும் அறிக்கையிடலுக்காகவும் தொடர்ச்சியான கண்காணிப்புகளை மேற்கொள்ளவுள்ளார்கள். அத்துடன், சகல உள்ளூராட்சி மன்றங்களின் தினசரி வருமான செலவினங்கள் இணையம் மூலமாகக் கணக்காய்வு செய்யவுள் ளார்கள்.

சபைகளின் காலாந்தரமான வருமான செலவின பகுப்பாய்வுகள் கணினிமயப் படுத்தப்படும். சபைகள் தங்களது மூலதன மற்றும் நானாவித செலவினங்களை ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட பாதீட்டுக்கு இணங்க மேற்கொள்வது கண்காணிக்கப்படும்.

வெளிநாட்டு நிதி வழங்கலுடனான செயற்றிட்டங்கள் ஆளுநரின் நெருங்கிய கண்காணிப்புக்கு உட்படுத்தப்படும்.

சபைகள் தங்கள் வருமான மிகைகளிலிருந்து நிதி தேவைப்படும் சபைகளுக்கு இலகு கடன்கள் பெறுவது வசதிப்படுத்தப்படும்.

மாகாண சபைக்குச் சொந்தமான திருத்தம் செய்யவேண்டிய வாகனங்கள் சபை செலவினத்தில் திருத்தப்பட முடியுமானால் அந்தச் சபைகள் அவற்றை சொந்தமாக்கிக் கொள்ள முடியும். இடையறாததும் விரைவான சேவை வழங்கலுக்காகவுமாக உள்ளூராட்சித் திணைக்களத்துக்குள் ஆளணிப் பரம்பல் சீராக்கப் பொறிமுறையொன்று வகுக்கப்படும்.

எல்லாச் சபைகளுக்கும் மாதத்தில் ஒரு பொதுவான நாள் குறிக்கப்பட்டு அந்நாளில் திறந்த அபிருத்திக் கலந்துரையாடலுக்காக பொதுமக்கள் அழைக்கப்படுவார்கள். அதில் வசதிப்படுத்துநர்களாக வட்டார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இருப்பார்கள்.

மாகாண உள்ளூராட்சி அமைச்சும் மாகாண வருமானத் திணைக்களமும் இணைந்து சபைகளின் வருமானங்களை அதிகரிப்பது தொடர்பில் ஆளுநருக்குப் பிரேரணைகளை முன்வைக்கும்.

மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரும் உள்ளூராட்சி ஆணையாளரும் இரு மாதங்களுக்கு ஒரு தடவை மேற்படி விடயங்களை மீளாய்வுக்கு உட்படுத்துவார்கள் - என்றுள்ளது. (ஐ)

## மகிந்த...

7ஆம் திகதி பிரதமர் பதவியை அவர் ஏற்பதற்கு உகந்த நாள் என்று சோதிடர்கள் சிலர் நாள் குறித்துக் கொடுத்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.

இந்தத் திகதியை மனதில்கொண்டே அவர் பிரதமராவதற்கான வியூகங்களை வகுத்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

(ஐ- சி)

## ஆவணங்கள்...

உறுதியளித்துள்ளார் என்று அவரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அமைச்சரின் ஊடகப் பிரிவு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில்,

வெடுக்குநாறிமலைக்கு களப் பயணம் மேற்கொண்ட ஜீவன் தொண்டமான் உள்ளிட்டோர் முதலில் வழிபாட்டில் ஈடுபட்டனர். அதன் பின்னர் ஆலய நிர்வாகத்தினருடன் கலந்துரையாடினார்.

இதன்போது நிர்வாகத்தினரிடம் ஆலயம் தொடர்பான ஆவணங்கள் ஏதும் இருக்கவில்லை. எனவே, அவற்றை ஏற்பாடு செய்யுமாறு அமைச்சர் கூறியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக நீதிமன்றத்தில் மூன்று வழக்குகள் இருப்பதால், சட்டத்துக்கு மதிப்பளித்து, தீர்ப்பு வெளியான பின்னர் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

வெடுக்குநாறி மலை விவகாரம் தொடர்பில், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் நாளை (இன்று திங்கட்கிழமை) நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்திலும் அமைச்சர் ஜீவன் பேசுவார் - என்றுள்ளது. (ஐ)

## வெடுக்குநாறி...

ஆதிசிவன் ஆலய விக்கிரகங்கள் உடைத்து எறியப்பட்டன. இது இந்துக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இது தொடர்பாக கடும் கண்டனங்கள் எழுந்த நிலையில், பல தரப்பினரின் கவனத்துக்கும் சென்றது.

இந்த நிலையில், அமைச்சர் ஜீவன் தொண்டமான் அடுத்த ஞாயிற்றுக் கிழமை (நேற்று) வெடுக்குநாறிமலைக்கு சென்று சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்வேன் என்று கூறியிருந்தார். இதே போன்று உடைக்கப்பட்ட விக்கிரகங்கள் மீளவும் பிரதிஷ்டை செய்யப்படும் என்று கிளிநொச்சியில் வைத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறியிருந்தார்.

இதனிடையே, நேற்று அதிகாலை 1 மணி தொடக்கம் 4 மணிவரையான நேரத்துக்குள் விக்கிரகங்களை பிரதிஷ்டை செய்ய ஆலய நிர்வாகம் முயன்றது. ஆனால், இதற்கு தொல்பொருள் திணைக்களம் தடை விதித்தது. அத்துடன், இந்தப் பணியை முன்னெடுக்க முயன்ற மூவரை பொலிஸார் கைது செய்து பின்னர் விடுவித்திருந்தனர்.

இந்த நிலையில், அமைச்சர்களின் வருகைக்காக அப்பகுதியினரும் ஆலய நிர்வாகமும் காத்திருந்ததது. நேற்றைய தினம் அமைச்சர்கள் இருவரும் பாராளுமன்ற உறுப்பினர்களான கு. திலீபன், ம. ராமேஸ்வரன் ஆகியோர் எனத் தமது பரிவாரங்களுடன் அங்கு சென்றிருந்தனர்.

அங்கு நிலைமைகளை கண்காணித்த அவர்கள், நீதிமன்றில் வழக்கு நிலுவையில் இருப்பதால் தற்போது விக்கிரகங்களை வைக்க முடியாது என்று கூறினர். அத்துடன், எதிர்வரும் 10ஆம் திகதிக்கு பின்னர் இது தொடர்பாக கலந்துரையாடி முடிவு எடுக்க முடியும் என்றும் தெரிவித்தனர்.

அவர்களின் இந்தப் பதிலால் ஆலய நிர்வாகத்தினரும் மக்களும் அதிருப்தியடைந்தனர். அவர்களிடையே கோபமும் குழப்பமும் ஏற்பட்டது.

இந்த நிலையில், “நீங்கள் சிலைகளை வைப்போம் என்று அறிக்கை விட்டபோது நீதிமன்றில் வழக்கு இருப்பது தெரியவில்லையா”, என்று கேள்விகளை எழுப்பினர். ஆனால், அமைச்சர்கள் இதற்கு பதிலளிக்காது அங்கிருந்து சென்றுவிட்டனர். (ஐ)

## மாகாண...

அமைச்சர் சு. ஜெய்சங்கர் அண்மையில் இலங்கை வந்தபோது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு விடுத்தார் என்று கூறப்படுகின்றது.

இந்நிலையில், கடந்த புதன்கிழமை இந்திய இல்லத்தில் இரவு விருந்தில் ஜனாதிபதியின் ஆலோசகர் சாகல ரத்நாயக்க உள்ளிட்ட அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் பலர் கலந்துகொண்டிருந்தனர். இதன்போது, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் இணைந்து செயல்பட புதுடில்லி ஆர்வமாக இருப்பதாக இந்திய தரப்பு குறிப்பிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

முன்னதாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு பயணமாக பல முயற்சிகளை செய்தார். ஆனால், அவரை வரவேற்க இந்தியா விரும்பியிருக்கவில்லை. இதனால், இந்த சந்திப்பு நிகழவில்லை. ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற பின்னர் இந்திய தரப்புடனான உறவில் விரிசல் காணப்பட்டிருந்தது. சீன உளவுக் கப்பல் அம்பாந்தோட்டைக்கு வருகை தந்தமை அந்த விரிசலை மேலும் அதிகப்படுத்தியது. எனினும் அண்மைக்காலமாக ரணில் விக்கிரமசிங்க - இந்தியாவுக்கான இலங்கை தூதுவர் மிலிந்த மொறகொட முன்னெடுத்த முயற்சிகளால் இந்தியா ஜனாதிபதிக்கு அழைப்பை அனுப்பியதாகக் கூறப்படுகின்றது.

(ஐ)

## சிவன்...

அறங்காவலர் பூபாலசிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பாக நேற்று அவர் செய்தியாளர்களுக்கு கருத்து வெளியிடுகையில்,

எமது ஆலயம் இடித்தழிக்கபட்டதை தொடர்ந்து, இன்று (நேற்று) அதிகாலை விக்கிரகங்களை பிரதிஸ்டை செய்வதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. எனினும், நேற்று மாலை இந்தப் பணிகளை செய்த மூவர் கைதுசெய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர். இந்தநிலையில், அமைச்சர்களின் பிரசன்னத்துடன் விக்கிரகங்கள் பிரதிஸ்டை செய்யப்படும் என எமக்கு தெரிவித்திருந்தனர். ஆனால் அது நடைபெறவில்லை. இது எமக்கு மிகுந்த கவலையளிக்கின்றது.

2018ஆம் ஆண்டு தொல்பொருள் திணைக்களம் தலையிடும்வரை இந்த ஆலயத்தில் பொதுமக்கள் சுதந்திரமாக தமது வழிபாடுகளை முன்னெடுத்திருந்தனர். இந்த ஆலய வளாகம் அரச வர்த்தமானியில் பிரகடனப்படுத்தாத ஓர் இடமாகவே இருக்கின்றது.

எனினும், இந்துஆலயங்களை அழிப்பதற்காகவே தொல்பொருள் திணைக்களம் உருவாக்கப்பட்டுள்ளதாக நாங்கள் கருதவேண்டியுள்ளது. குருந்தூர்மலையில் நீதிமன்ற தீர்ப்பை மீறி விகாரை கட்டப்படுகின்றது. அதை எந்தச் சட்டமும் தண்டிக்கவில்லை. ஆனால், ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்துக்குள் செல்ல வேண்டாம் என்று நீதிமன்றம் எமக்கு இதுவரை உத்தரவு போடவில்லை. தொல்லியல் திணைக்களமும் பொலிஸாருமே அதற்கு தடை ஏற்படுத்துகின்றனர்.

எம்மை உள்ளே விடமால் செய்துவிட்டு தற்போது யார் உடைத்தது என்று எங்களை பார்த்து அவர்கள் கேட்கின்றனர். மதவெறி பிடித்தவர்களால் எமது இந்து ஆலயங்கள் சீண்டப்படுகின்றன. நாம் ஏமாற்றம் அடைந்துள்ளோம். எனவே, இந்த நாட்டில் நல்லிணக்கம் ஏற்ப்படுத்துவதற்கான வாய்ப்பே இல்லை என்று நாம் கருதுகின்றோம். இலங்கை ஒரு சிவபூமி எனவே இந்த செயல்பாடு ஓர் அழிவுக்கான அத்திவாரமாகவே இருக்கும் - என்றார்.

(ஐ)

# புதிய பயங்கரவாத சட்டம் ஆபத்தானது

அரசாங்கத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து முகப்புத்தகத்தில் கருத்துகள் பதிவிடுவதும் பயங்கரவாத செயல்பாடாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான செயல்பாடுகளுக்கு 20 வருட கால சிறை தண்டனை விதிக்கப்படலாம். பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் பயங்கரவாதத்திற்கு எதிரானதல்ல, ஜனநாயகத்துக்கு எதிரானது, ஆகவே இதனை ஏற்பதா இல்லையா என்பதை நாட்டு மக்கள் தீர்மானிக்க வேண்டும் - என்று மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

அந்தக் கட்சியின் ஹர்ஷ நாணயக்கார கட்சித் தலைமையகத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

## அமைச்சரவை...

மாற்றப்படும் என்று தகவல்கள் பரவின. ஆனால், அவை வதந்திகளாகவே இருந்தன.

இந்த நிலையில், ஏப்ரல் தொடக்க வாரத்தில் அமைச்சரவை மாற்றம் இருக்கும் என்றும் செய்திகள் வெளியாகின. ஆனால், அதுவும் ஆதாரமற்றது.

அண்மையில், ஜனாதிபதியை அமைச்சரவை மாற்றம் தொடர்பாக பஸில் ராஜபக்ஷ சந்தித்து கலந்துரையாடினார். ஆனால், இது குறித்து எந்த விடயமும் முன்னகர்த்தப்படவில்லை என்றே இப்போது அறியவருகின்றது. (ஐ)

## உரிய...

நடத்தப்படுவதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில் கோப்பாய் பொலிஸார் மற்றும் சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள் நேற்று முற்பகல் அங்கு சென்றனர்.

இதன்போது 13 சிறுவர்கள் அங்கிருந்து மீட்கப்பட்டனர். அவர்கள் அங்கு துன்புறுத்தப்பட்டனர் என்றும் உரிய வகையில் உணவு வழங்கப்படவில்லை எனவும் விசாரணைகளில் தெரிய வந்ததாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட சிறுவர்கள் சட்ட மருத்துவ அதிகாரியிடம் முற்படுத்தப் பட்டு மருத்துவ அறிக்கை பெற்றதன் பின்னர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதி மன்றில் முற்படுத்தப்படவுள்ளனர். (ஐ-03)

## 10 இலட்சம்...

திட்டமாகும்.

யுத்த காலப்பகுதியில் தமிழர்களுடைய புராதன அடையாளங்கள் மற்றும் வரலாற்று நிலங்கள் பாதுகாக்கப்பட்ட நிலையில், தற்போது தமிழர்களிடமிருந்து நிலப் பகுதியை குறைக்க வேண்டும் என்பதில் தென்னிலங்கை திட்டத்தை அரங்கேற்றி வருகிறது.

மகாவலி அதிகார சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம், பிரதேச செயலகமோ மாவட்ட செயலகமோ கேள்வி கேட்க முடியாத அளவுக்கு அதிகாரம் உள்ள சபையாக காணப்படுகிறது.

மகாவலி எல் வலயத்தில் உள்ளடங்கும் முல்லைத்தீவு மாவட்டம், வெலிஓயா பகுதியளவில் அல்லது முழுதாக சிங்கள மக்களையே குடியேற்ற திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் 14 ஆயிரம் பேர் காணியற்றவர்களாக பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கு இன்னும் காணிகள் வழங்கப்படவில்லை. இந்து சமயம் பல்வேறு வழிகளிலும் நசுக்கப்பட்டு வரும் நிலையில், தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பேசுவதற்கு தயக்கம் காட்டுகின்றனர்.

இந்து சமயத்தில் இருக்கின்ற பல்வேறு அமைப்புகளும் ஒன்றிணைந்து வலுவான ஓர் அமைப்பின் கீழ் செயற்படும்போது தமிழ் மக்களின் நிலங்களையும் இந்து சமயத்தையும் பாதுகாக்க முடியும் என்று அண்மையில் நல்லை ஆதினத்தில் நடந்த கூட்டத்தில் தெரிவித்தார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# திருமலையில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க முயலும் இந்தியா!

கொழும்பு, ஏப். 03

**திருகோணமலையில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணிப்பதற்கான முன்மொழிவை இந்திய அரசாங்கம் சமர்ப்பித்துள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

திருகோணமலை எண்ணெய் தாங்கி வளாகமும் இந்திய திட்டமொன்றைக் கோரியுள்ளதுடன், அதற்கு வெளியில் இந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படவுள்ளதாக அறிய முடிகின்றது.

எதிர்வரும் சிங்கள மற்றும் இந்து புத்தாண்டுக்கு பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ள நிலையில், அந்த விஜயத்தின் போது இது குறித்தும் கலந்துரையாடப்படவுள்ளதாக தெரியவருகிறது.

இதற்கிடையில், எரிபொருள் விநியோகம், விநியோகம் மற்றும் விற்பனையை 3 சர்வதேச நிறுவனங்களுக்கு வழங்க அரசாங்கம் கடந்த வாரம் முடிவு செய்தது. (அ)

# புதிய அரசியல் கட்சி உருவாக்கும் சம்பிக்க

கொழும்பு, ஏப். 03

அடுத்த மாதம் புதிய அரசியல் கட்சியை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

பதுளை பிரதேசத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர் இவ்வாறு கூறினார்.

அடுத்த மாதம், நாட்டில் புதிய அரசியல் கட்சி ஸ்தாபிக்கப்படும். ஏனெனில் இந்த நாட்டை இந்த திவால் நிலையிலிருந்து காப்பாற்ற, தகுதி அடிப்படையிலான அரசியல் கட்சி தேவை. குடும்ப பரம்பரை அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் -என அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# உயர்தர விடைத்தாள் திருத்தம் தாமதத்துக்கு அரசே பொறுப்பு!

## பல்கலை ஆசிரியர் சம்மேளனம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 03

உயர்தரப் பரீட்சை விடைத்தாள்கள் திருத்தம் தாமதமானமைக்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டுமென பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனம் தெரிவித்துள்ளது.

தமது கோரிக்கைகளுக்கு அரசாங்கம் உரிய தீர்வை வழங்கினால், விடைத்தாள்களை உடனடியாக சரிபார்க்கும் பணியை ஆரம்பிக்க தயார் என அதன் தலைவர் பேராசிரியர் ஷியாம பன்னஹக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வரிக் கொள்கையால் அநீதி இழைக்கப்படும் எங்கள் உறுப்பினர்களுக்கு கொஞ்சம் நிவாரணம் தேவை என்ற அடிப்படையில். இதனுடன் வேறு எந்த கோரிக்கையும் இணைக்கப்படவில்லை அதேநேரம் இனவாதப் பிரச்னையை உருவாக்க முயற்சிக்கின்றன - என்றார்

தமிழ் மொழியில் வினாத்தாள்கள் திருப்படுவதாக வெளிவரும் செய்திகளை பேராசிரியர் கடுமையாக மறுத்துள்ளார்.

இங்கு"சிங்கள, தமிழ் பேச்சு கிடையாது. இதில் பங்கேற்காத அனைவரும் பல்கலைக்கழக பேராசிரியர்கள் மட்டுமல்ல, பாடசாலை ஆசிரியர்களும் இதில் பங்கேற்கவில்லை.எனவே, இந்த நிலை தொடர்வதற்கு நாங்கள் பொறுப்பல்ல. எனவே பொறுப்புடன் சொல்கிறோம். அரசாங்கம் சாதகமான பதில் அளித்தால், எந்த நேரத்திலும் இப்பணியை ஆரம்பிக்க தயாராக உள்ளோம்.

இதற்கு இன்றே தீர்வு கிடைத்தால், இன்று முதல் விடைத்தாள்களை பார்க்க எங்கள் உறுப்பினர்கள் தயாராக உள்ளனர் - என்றார். (அ)

# தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரங்கம் அமைக்க தமிழ் கட்சிகளுக்கு மனோ அழைப்பு!

கொழும்பு, ஏப். 03

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் அரங்கம் ஒன்றை பாராளுமன்றத்தில் அமைத்திடும் யோசனையை முன்னிறுத்தி தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவர் மனோ கணேசன் எம்.பி, இலங்கை தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா, தமிழீழ விடுதலை இயக்கத் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி தலைவர் த. சித்தார்த்தன், தமிழ் மக்கள் கூட்டணிச் செயலாளர் நாயகம் சீ. வி. விக்கினேஸ்வரன் ஆகியோருக்கு மின்னஞ்சல் மூலம் அழைப்பு விடுத்துள்ளார்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவர்கள் மற்றும் பங்காளிக் கட்சித் தலைவர்களான பழனி திகாம்பரம், வே. இராதாகிருஷ்ணன் ஆகியோரின் உடன்பாட்டுடன் இந்த அழைப்பை விடுப்பதாகவும் தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவர் மனோ கணேசன் மேலும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மனோ எம்.பி கூறியதாவது:

முதற்கட்டமாக மாவை சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன், சீ. வி. விக்கினேஸ்வரன் ஆகியோருக்கு அவர்களது கட்சிப் பதவிகளை விளித்து இந்த அழைப்பை விடுத்துள்ளேன். தொலைபேசியிலும் உரையாடி உள்ளேன்.

எமது கூட்டணியின் தலைமைக்குழு உறுப்பினர்களான பழனி திகாம்பரம், வே. இராதாகிருஷ்ணன் ஆகியோரிடமும் உரையாடி உள்ளேன்.

எனது நோக்கம், இலங்கை பாராளுமன்றத்தில், தமிழ் பாராளுமன்ற அரங்கம் (Parliamentary Tamil Caucus) என்ற அமைப்பை உருவாக்குவதாகும்.

இதுபற்றி நான் முன்பே கலந்துரையாடி உள்ளேன். எனினும் அன்று நிலவிய அரசியல் சூழல் காரணமாக அது சாத்தியமாகவில்லை. இன்று அதற்கான சாதகமான அரசியல் சூழல் உருவாகி வருவதாக நினைக்கிறேன்.

இதுபற்றி கொழும்பில் வாழும் இரா. சம்பந்தனையும் சந்தித்து உரையாட முடிவு செய்துள்ளேன்.



நம் நாடு இன்று சந்தித்துள்ள தேசிய பொருளாதார நெருக்கடிக்கான தீர்வை தேட இலங்கை அரசும், அதற்கு துணையாக சர்வதேச சமூகமும் கூட்டு முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

இம்முயற்சிகளை வரவேற்கும் அதே வேளை, பொருளாதார மீட்சியுடன் நின்று விடாமல், தேசிய நெருக்கடிக்கு மூலகாரணமான தேசிய இனப்பிரச்னைக்கான தீர்வு தேடலும், இதனுடன் சமாந்திரமாக முன்னெடுக்கப்பட வேண்டும் என நான் விரும்புகிறேன்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் ஈழத்தமிழ் சகோதரர்களின் தனித்துவ அரசியல் அபிலாஷைகளையும், தென்னிலங்கையில் வாழும் மலையக தமிழ் மக்களின் தனித்துவ அரசியல் அபிலாஷைகளையும் அடிப்படையாக கொண்டு, இலங்கை அரசுடன் அரசியல் பேச்சுவார்த்தைகளை தனித்தனியாக முன்னெடுக்க, அவ்வந்த மக்களின் ஆணையை பெற்ற அரசியல் கட்சிகளின் உரிமைகளை அங்கீகரிக்க வேண்டும் என நான் விரும்புகிறேன்.

அரசியல் தீர்வு பேச்சுகளை, தமிழ் பாராளுமன்ற அரங்கத்தின் மூலம் முன்னெடுக்கும் நோக்கம் எனக்கு கிடையாது.

இலங்கை நாடு முழுக்க வாழும் தமிழ் மக்கள் இன்று அன்றாடம் எதிர்கொள்ளும் சமகால நெருக்கடி பிரச்னைகளையும், தேசிய இனப்பிரச்சினைக்கு காணப்படக்கூடிய தீர்வு எதுவாக இருந்தாலும், அவற்றுக்கான முதன்மை தேவையாக, "இலங்கை ஒரு பன்மைத்துவ நாடு" என்ற அடிப்படை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதையும், அனைத்து பெரும்பான்மை தேசிய கட்சிகளுக்கும் நேரடியாக அறிவிக்கவும், சிங்கள சகோதர பெருந்திரளினருக்கு, அவர்களை பிரதிநிதித்துவப்படுத்துவதாக கூறும் அரசியல் கட்சிகளை தாண்டி, நேரடியாக விளக்கமளிக்கவும், இவை தொடர்பான எமது கூட்டு செய்தியை சர்வதேச சமூகத்துக்கும், இலங்கை அபிவிருத்தி பங்காளர்களுக்கும் தெரிவிக்கவும், தமிழ் பாராளுமன்ற அரங்கம் முன்முயற்சிகளை எடுக்க வேண்டும் என நான் விரும்புகிறேன்.

இந்த முயற்சியில் இன்னமும் பல தமிழ்க் கட்சிகளை இணைத்துக்கொள்ளவேண்டும், முஸ்லிம் சகோதரர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளையும் இணைத்துக் கொள்ள வேண்டும் ஆகிய யோசனைகள் இருக்கின்றன.

அவற்றை எதிர்காலத்தில் கவனிக்கவேண்டும் என விரும்புகிறேன். தற்போது அழைப்பு விடுக்கப்பட்டிருக்கும் கட்சிகளின் தலைவர்களது அதிகாரபூர்வ பதில்களை அடுத்தே இது தொடர்பில் எனது அடுத்த கட்ட நடவடிக்கைகள் அமையும் - என்றார். (அ)

# புதிய பயங்கரவாத சட்டமூலத்துக்கு ஆசிரியர் சேவைச் சங்கம் எதிர்ப்பு!

கொழும்பு, ஏப். 03

உத்தேச புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை இணைந்த ஆசிரியர் சேவை சங்கம் முழுமையாக எதிர்க்கின்றது என்று அந்த சங்கத்தின் பொதுச் செயலாளர் அமில சந்தருவான் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்துவிட்டு புதிய சட்டத்தைக் கொண்டு வருவதற்கு ரணில் விக்கிரமசிங்க முயற்சித்தார்.

எனினும் அந்த முயற்சி பலனளிக்கவில்லை. எனினும் சூழ்ச்சிகளுக்கு மத்தியில் ராஜபக்ஷர்களின் பாதுகாவலனான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ ஊடாக உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என ஒன்றைக் கொண்டு வரவுள்ளார்.

பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை சமூகத்தில் பலமாக எழுந்து வருகின்ற நிலையில் நீக்கப்படவேண்டிய சட்டத்துக்கு பதிலாக உறுதியான ஒரு சட்டத்தைக் கொண்டுவருவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இங்கு பெயர் மாற்றம் மட்டுமே இடம்பெற்றுள்ளது.

அடுத்ததாக எதற்காக இந்த சட்டமூலத்தை மிகவும் அவசரமாகக் கொண்டு வருகின்றார்கள்.

இவ்வாறான சட்டங்களை கொண்டுவரும்போது அதற்கான இணக்கப்பாட்டைச் சமூகத்தில் பெற்றிருக்கவேண்டும்.

இவ்வாறான சட்டங்கள் இந்த சமூகத்துக்கு பொறுத்தமானதா இல்லையா என்பது தொடர்பில் கலந்துரையாடியிருக்கவேண்டும்.

ஜனநாயகப் பண்புகள் மிக்க சமூகமொன்றில இவ்வாறான எவ்வித கலந்துரையாடல்களும் இல்லாமல் இவ்வாறான சட்டங்களைக் கொண்டுவருவதற்கு எவருக்கும் அதிகாரம் இல்லை.

இவ்வாறான சட்டங்களைக் கொண்டுவருவதற்கு இந்த அரசாங்கத்துக்கு எவ்வித அதிகாரமும் இல்லை.

ஏனெனில் இந்த அரசாங்கம் மக்கள் ஆணையுடன் ஆட்சிக்கு வரவில்லை.

தற்போதைய ஜனாதிபதி, மக்கள் ஆணையுடன் ஆட்சிக்கு வரவில்லை.

எனவே, இவ்வாறான சட்டங்களைக் கொண்டுவருவதற்கு இந்த அரசாங்கத்துக்கு சட்டரீதியான அதிகாரம், அரசியல் அதிகாரம்கூட இல்லை.

எனவே, மிகவும் மோசமான ஒடுக்குமுறைகளுக்கு வித்திடும் இவ்வாறான சட்டங்களைக் கொண்டு வருவதற்கு எதிராக நாம் எமது முழுமையான எதிர்ப்பை தெரிவிக்கின்றோம் - என்றார். (அ-கே)

# அதிக விலைகளுக்கு மருந்து கொள்வனவு

## ரவி குமுதேஷ் குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 03

அதிக விலைக்கு மருந்துகள் வாங்குவது தொடர்ந்து இடம்பெற்று வருவதாகவும், மேலும் இரண்டு மருந்துகளை அதிக விலைக்கு கொள்வனவு செய்ய அரசு தயாராகி வருவதாகவும் சுகாதார சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

7000 ரூபாவுக்கு விற்கப்படும் கான்சிக்ளோவியன் என்ற வைரஸ் தடுப்பு மருந்தை 77,000 ரூபாவுக்கும், 200 ரூபா பெறுமதியான லினோசோலிட் என்ற அன்ரிபயோடிக் மருந்தை 2200 ரூபாவுக்கும் கொள்வனவு செய்ய முயற்சி நடந்து வருவதாகவும், இதுபோன்ற செயல்களால் நாடு தேவையற்ற கடனாளியாகிவிடும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.04.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.